# தமிழ் மொழியும் இலக்கியமும்

## செயல் நூல்

## தரம் – 9

**அந்த ஒளிக்கு முடிவே இல்லை**
**ஏனெனில் அது கல்வியாக இருக்கிறது**





வெளியீடு:
கண்ணம்மா பதிப்பகம்.
யாழ்ப்பாணம்.



ஆக்கம்
தி. உதயசூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## செயல் நூல்

## தரம்-9

ஆக்கம்
தி. உதயசூரியன்

வெளியீடு
கண்ணம்மா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல்,**
தமிழ் மொழியும் இலக்கியமும்
செயல் நூல் - தரம் - 9

**ஆக்கம்,**
தி. உதயசூரியன்

**முதற்பதிப்பு**
2004/

முன் அட்டை உயிரோவியம்
செல்வி. வீ. ரஞ்சினி

கணனி பக்க வடிவமைப்பு,
ஞா. மணிமேகலை

**அச்சுப் பதிப்பு,**
அம்பாள் பிறின்டேர்ஸ்,
195/4, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

விலை :- **200/=**

ISBN 955-98302-2-8

**Title**
Tamil Language and Literature
Work Book - Grade 9

**Author**
T. Uthayasooriyan

**First Edition**
2004,

On cover MS. V. Ranjani
Cover Photo : Karthik
Layout and Designs
MS. G Manimekalai

**Printers**
Ambal Printers
195/4, Parameshwara Junction,
Thirunelvely - Jaffna.

**Price - 200/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்

கட்சின்

அம்மையாருக்கு

*This work is respectfully*

Dedicated

*To*

*MS Muriel Violet Hutchins*

*The*

*Greatest humanist I have met*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர்,**
**திரு மா. சின்னத்தம்பி அவர்கள் வழங்கிய,**

# அணிந்துரை

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை நாடு தனக்கெனத் தனித்தன்மைமிக்கதொரு கல்வித்திட்டத்தை வடிவமைத்துக் கொள்வதில் பாரிய இடர்பாடுகளை எதிர் கொண்டு வருகிறது. 1972 ஆம் ஆண்டு கல்வியின் புதியபாதை முற்போக்கான அமிசங்கள் பலவற்றைச் கொண்டிருந்தபோதிலும் நடைமுறையில் பலவீனமான தொன்றாகவே அது காணப்பட்டது. 1977ஆம் ஆண்டு அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து அது முற்றாகவே செயலிழந்து விட்டது.

அண்மைக்கால உலகமயமாக்கல் போக்குகளுக்கு ஈடுகொடுக்கும் விதமாகத் தயாரிக்கப்பட்ட தற்போதைய (1997-1999) கல்வித்திட்டம் பல வகையிலும் 1972 கல்வியின் புதியபாதையை ஒத்ததாகக் காணப்படுகிறது.

1980 முதல் நடைமுறைக்கு வந்த இலவசப்பாடநூல் விநியோகத்தினால் நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள சிந்தனை வறுமையினை நாடு இன்னும் பல தலைமுறை காலத்திற்கு அனுபவிக்கவேண்டும் என்பது அதன் தலைவிதி என்றாகிவிட்டது. அதன் தலைவிதியை மாற்றி அபிவிருத்தியை நோக்கிய திசைவழியில் நாட்டை முன்நகர்த்திச் செல்லுதல் என்ற கொள்கையின் அடிப்படையில் தற்போதய பாடத்திட்டங்கள் உட்பட அனைத்துக் கல்விச் செயற்பாடுகளிலும் புதிய புதிய மாறுதல்களும் புதிய புதிய அணுகுமுறைகளும் கையாளப்பட்டு வருகிறன.

தற்போதுள்ள பாடத்திட்டத்தினை அடியொற்றியதாக தரம் - 9 வகுப்பிற்கான தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூலின் அலகு ரீதியான கணிப்பீட்டுக் கருவிகள் திறந்தநூற் பரீட்சைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக வெளிவரும் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நூலாசிரியரான தி. உதயசூரியன் பல்கலைக்கழகத்திலே கல்வியியல் கற்கைநெறியினை எம்மிடம் முறையாகக் கற்பவர். கல்வி உளவியல், கல்வித்தொழில் நுட்பம், கலைத்திட்டக் கற்கைகள், கல்வித்திட்டமிடல் போன்ற பாடத்துறைகளில் ஈடுபாடும் விருப்பமும் கொண்டவர்.

இவர் கடந்த (2003) ஆண்டு தரம் - 8 தமிழ்மொழிப் பாடத்திற்கான செயல் நூலை ஆக்கி வெளியிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக தரம் - 9 வகுப்பிற்கான செயல்நூலாக இந்த நூல் வெளிவருகிறது. அவற்றின் நம்பகம் தகுதி என்பவற்றை அறிதற் பொருட்டு அந்த நூலில் உள்ள சில வினாக்கள் இந்த நூலிலும் இடம் பெற்றுள்ளன என்று கருதுகிறேன். மொழிப்பாடம் கற்பதன் ஊடாக மொழிசார்ந்த திறன்களை விருத்தி செய்து கொள்வதுடன் மாணவன் தன்னை அறிதல், தான் வாழும் சமூகத்தின் இயல்புகளை விளங்கிக் கொள்ளுதல், மூத்தோரை வணங்குதல், தனது திறன்களை விருத்திசெய்தல், படைப்பாற்றலை விருத்திசெய்தல், சமூகமயமாதல் என்பவற்றுக்கான பயிற்சிகளைக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ள இந்த நூல் தரம் - 9 மாணவர்களுக்கும் கல்வியில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் பயன்படக்கூடிய ஒன்றாகும்.

தனித்துவமான நூலாக்கமுறைமை ஒன்றினை நூலாசிரியர் தனக்கென உருவாக்கிக் கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

மா. சின்னத்தம்பி

யாழ்ப்பாணம்
30-06-2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர்
திரு. த. குருகுலராசா அவர்கள் வழங்கிய

## மதிப்புரை

அரச புதிய கல்வித் திட்டத்திற்கு அமைவாகத் தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் - 9 வகுப்பிற்கான இச்செயலட்டை நூல் ஆக்கப்பட்டுள்ளது. பாடவிதானத்தை அடியொற்றித் தயாரிக்கப்பட்ட இச்செயலட்டை நூலானது இவ்வகுப்பில் கற்கும், மெல்லக்கற்கும் மாணவர்கள் உட்பட எல்லா மாணவர்களுக்கும் ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயலட்டை நூலில் அலகுப் பரீட்சைகளுக்கான வினாக்களும் அதற்கான புள்ளிகளும் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் கற்றலின் பின்னர் துலங்கும்போது தொடர் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் இச்செயலட்டை நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியின் பெறுபேறு பரீட்சைகள் மூலமும் செயற்பாடுகள் மூலமும் மதிப்பிடப்படுகின்றது. மாணவர்கள் பாடங்களைக் கற்றுக் கிரகித்த பொழுதும் பரீட்சையில் பொருத்தமான விடை எழுதுவதில் சிலர் தவறுகின்றனர். இதற்குக் காரணம் வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுவதில் போதியளவு பயிற்சியின்மையே ஆகும். இக்குறைபாட்டைத் தவிர்க்கு முகமாகவும், பரீட்சைக்கு உத்வேகத்துடன் முகம் கொடுப்பதற்காகவும் இச்செயலட்டை நூல் வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கது.

இச் செயலட்டை நூலில் கொடுக்கப்பட்ட பயிற்சி வினாக்களில் தமிழறிஞர்கள், சமகால உலக விடயங்கள் தொடர்பாகவும், சமூக விழுமியங்கள் பிரதிபலிப்பனவும் தொடர்பான பயிற்சிகள் உள்ளமை சமூக மேம்பாட்டு விருத்திக்கு நிச்சயம் உதவும். கிரகித்தல், எழுத்து, இலக்கணம், மொழிவளம் ஆகிய கூறுகள் இச்செயலட்டையில் ஒன்றிணைக்கப்பட்டமை மொழிப்பாடத் தேர்ச்சி விருத்தியை மேம்படுத்தி, அறிவு ஆட்சித்திறனை வளர்க்கும் என நம்புகிறேன்.

இச் செயலட்டை நூலைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் உச்சப் பயன் பெறுவதோடு, ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் இச் செயலட்டைநூல் பெரிதும் துணைபுரியுமென எண்ணுகிறேன்.

பல்வேறு மொழி ஆற்றல்களை விருத்தி செய்யும் இச்செயலட்டை நூலை ஆக்கிய ஆசிரியரான தி. உதயசூரியனுக்கு எனது பாராட்டுக்களும் நன்றியும் உரித்தாகுக.

புதுக்குடியிருப்பு　　　　　　　　　　த. குருகுலராசா

03.07.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலங்கை அரசாங்கத்தினது தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் - 9 பாடநூலினை அடியொற்றியதாக இந்தச் செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அது முதல் நூல் எனில் இது வழிநூல். அவ்வாறெனில் பின்னோன் வேண்டும் விகற்பங்கள் பல இந்நூலின் கண்ணுள்ளன.

இடது கையால் எழுதுவதற்கு சிறிது பயிற்சி கொடுக்க விரும்பி ஒவ்வொரு செயலின் இரண்டாவது வினா இடது கையினைப் பயன்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. எனினும் கைகளை மாறிப் பயன்படுத்த முடியாத மாணவர்கள் அவ்வினாவுக்கும் வழமை போலவே விடையளிக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.

இந்த நூல் அமைப்பை ஒத்ததாக தரம் - 8 வகுப்புக்கான செயல்நூலை ஏற்கனவே கல்வி உலகிற்கு வழங்கியுள்ளோம். இவ்விரு நூல்களும் ஆசிரியம் சார் உளவியல் (Pedagogical Psychology) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளமை மாணவரை மையப்படுத்திய தற்போதைய கல்வி முறைமைக்கு ஏற்புடையதொன்றாகும்.

தரம் - 9 தமிழ்பாட அலகு ரீதியான தேர்ச்சிமட்டத்தினை அளவிடுவதற்கான கணிப்பீட்டுக்கருவிகளே இந்நூலில் பிரதான உள்ளடக்கமாகும்.

யாழ்பாணப் பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பி அவர்களின் உரை இந்நூலை அணிசெய்கின்றது. முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் த. குருகுலராசா அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார்கள்.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள், வேண்டிய ஆலோசனை வழங்கினார்.

மதிப்புக்குரிய மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் நூல் முழுவதையும் அவதானமாக வாசித்து புறூவ் திருத்தி உதவினார்கள்.

தரம் - 8 செயல் நூல் வெளியீட்டுவிழாவினை (28-10-2003) தலைமையேற்றுச் சிறப்பித்தவர். சகஆசிரியை செல்வி, க. சிவனேஸ்வரி அவர்கள்.

நூல் வெளியீட்டுத்துறையில் எனக்கு உறுதுணையாக நிற்பவர் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் எனது இதயங் கலந்த நன்றிகள் உரித்தாகுக.

யாழ்ப்பாணம்
05-07-2004

அன்புள்ள,
தி. உதயசூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| செயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 01. அழகு | --- | 01 |
| 02. ஓவியக்கலை | --- | 05 |
| 03. மற்றவர்க்காய்ப் பட்ட துயர் | --- | 09 |
| 04. காக்கை காட்டிய வழி | --- | 13 |
| 05. பாஞ்சாலி சபதம் | --- | 18 |
| 06. புலவரும் வறுமையும் | --- | 22 |
| 07. திறந்த நூற் பரீட்சை - I | --- | 27 |
| 08. குடை | --- | 29 |
| 09. சீறாப்புராணம் | --- | 34 |
| 10. இருளின் மத்தியில் ஒளி பிறந்தது மட்டுவில் எனக்கு மண்டூராயிற்று | --- | 38 |
| 11. மடுமாதா அஞ்சலி | --- | 44 |
| 12. கண்ணே எங்கள் கண்ணாவாய் | --- | 48 |
| 13. கோள்மண்டலக் கூடம் | --- | 53 |
| 14. காயுமே | --- | 58 |
| 15. திறந்த நூற் பரீட்சை - II | --- | 63 |
| 16. கம்பராமாயணம் | --- | 65 |
| 17. தனிப்பெருங் கருணை | --- | 70 |
| 18. பல்சுவைப் பாடல்கள் | --- | 75 |
| 19. வழியும் மொழியும் | --- | 80 |
| 20. திருக்குறள் | --- | 86 |
| 21. சேமநிதி | --- | 90 |
| 22. திறந்த நூற் பரீட்சை - III | --- | 95 |
| 23. மாணவர் சுயமதிப்பீடு | --- | 97 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகு

இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

**01. மேல்வரும் குருவணக்கப் பாடலைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன்
குருவே பரப்பிரம்மத்தின் உண்மையான வடிவம்
அத்தகைய சிறப்புவாய்ந்த என்னுடைய
குருவாகிய தங்களை வணங்குகின்றேன்."

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாரதியின் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

------------------------------------------------------------

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. அழகு என்ற பாடலைப் பாடியவர்
   i. பாரதிதாசன் ii. மஹாகவி iii. புலவர் iv. ஔவையார்
2. பரிதி என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்
   i. சந்திரன் ii. நட்சத்திரம் iii. சூரியன் iv. ஆகாயம்
3. மேற்றிசை என்பதைப் பிரித்தெழுதினால் வருவது.
   i. மேற் + றிசை ii. மேற் + திசை iii. மேல் + திசை iv. மேற்கு + திசை
4. சுடர், சோதி, கதிர் முதலாம் பல பொருள் தரும் ஒரு சொல்
   i. நெல் ii. ஒளி iii. மணி iv. ஒலி
5. பசையுள்ள பொருளிலெல்லாம் பசையாக இருப்பவள்
   i. தாய் ii. அழகு iii. அறிவு iv. அன்பு

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

i. சொற்கள் தனித்து நின்றோ ஒன்றுடனொன்று தொடர்ந்து நின்றோ பொருள் தருமாயின் அது வாக்கியம் எனப்படும். [ ]

ii. ஒரு வாக்கியத்தின் பயன் முற்றுப் பெற்று நிற்குமிடம் பயனிலை எனப்படும். [ ]

iii. செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை ஏற்ற பெயர்ச்சொல்லாகும். [ ]

iv. பாரதிதாசன் இலங்கையிலுள்ள மட்டக்களப்பிலே பிறந்தார். [ ]

v. பசுமை என்பதன் ஒத்த கருத்துச் சொல் முதுமை. [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக**

| | | |
|---|---|---|
| i. | அடைமொழி | முதலாம் வேற்றுமை |
| ii. | எழுவாய் | முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று |
| iii. | செயப்படுபொருள் | மஞ்சரி |
| iv. | கொத்து | வாக்கியத்தின் உபஉறுப்பு |
| v. | பாடு | இரண்டாம் வேற்றுமை |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. திருவிளக்கில் நின்று சிரிப்பவள் யார்?

------------------------------------------------------------

ii. கொற்றவன் என்ற சொல்லின் பொருளுணர்த்தும் வேறு ஐந்து சொற்கள் தருக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

iii. அழகுப் பெண் எதனாற் பூரிக்கின்றாள்?

------------------------------------------------------------

iv. இலங்கை ஒரு தீவு என்ற வாக்கியத்தின் பயனிலை என்ன?

------------------------------------------------------------

v. ஒரு வாக்கியத்திலே பயனிலை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x6=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வருஞ் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித் தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

i. விளக்கு :------------------------------------------------

------------------------------------------------

ii. கலப்பை :------------------------------------------------

------------------------------------------------

iii. புனல் :------------------------------------------------

------------------------------------------------

iv. வித்தை :------------------------------------------------

------------------------------------------------

v. கவிதை :------------------------------------------------

------------------------------------------------

3x5=15 புள்ளிகள்

08. **மேல்வரும் எதுகைச் சொல் அட்டவணையைப் பூர்த்தி செய்க**

| காலை | திசை | நெஞ்சு | புறம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

12 புள்ளிகள்

09. **நீங்கள் அனுபவித்த இயற்கைக் காட்சியொன்றினை ஒரு பந்தியாக எழுதுக.**

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. தரப்பட்டுள்ள உங்களது சுயவிபரப் படிவத்தைப் பூர்த்தி செய்க.**

01. பெயர்:-செல்வன்/செல்வி:------------------------------------

02. அம்மாவின் பெயர்:------------------------------------

03. அப்பாவின் பெயர்:------------------------------------

04. முகவரி:------------------------------------

------------------------------------

05. பிறந்த திகதி:------------------------------------

06. வயது:------------------------------------

07. உடன்பிறந்தவர்கள்:------------------------------------

08. பின்பற்றுகின்ற சமயம்:------------------------------------

09. தந்தையின் தொழில்:------------------------------------

10. குடும்ப வைத்தியரின் பெயர்:------------------------------------

11. படிக்கும் பாடசாலை:------------------------------------

12. படிக்கும் தரம்:------------------------------------

13. வகுப்பாசிரியரின் பெயர்:------------------------------------

14. மிகவும் விருப்பமான பாடம்:------------------------------------

15. மிகவும் விருப்பமான விளையாட்டு:------------------------------------

16. மிகவும் விருப்பமான விளையாட்டு வீரர் :------------------------------------

17. மிகவும் விருப்பமான உணவு:------------------------------------

18. மிகவும் விருப்பமான பழம்:------------------------------------

19. மிகவும் விருப்பமான பறவை:------------------------------------

20. மிகவும் விருப்பமான மிருகம்:------------------------------------

21. மிகவும் விருப்பமான நிறம்:------------------------------------

22. உயர்வாக மதிக்கின்ற பெரியார்:------------------------------------

23. விரும்புகின்ற தொழில்:------------------------------------

24. இதுவரை செய்த சாதனைகள்:-

1. ------------------------------------

2. ------------------------------------

25. இதுவரை பெற்றுக்கொண்ட பரிசுகள்/விருதுகள்:-

1. ------------------------------------

2. ------------------------------------

3. ------------------------------------

26. எதிர்கால இலட்சியம்:------------------------------------

27. கையொப்பம்:------------------------------------ திகதி:------------------------------------

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவியக்கலை

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.*
*எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

உன் வீட்டு முகவரியை இறுதி மூச்சில் எனக்குத் தா
எஞ்சிய வீடுகளில் இருப்பவர்கள் மத்தியிலே
உற்றாரைக் கண்டு பிடித்து உன்னைப் பற்றிச் சொல்வதற்கு
இன்னுயிரை உவந்தளித்த உன்துணிவைப் போற்றுதற்கு
வார்த்தைகள் போதவில்லை வரலாறு பாடும் உன்னை.

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

2 புள்ளிகள்

**02. மேல்வரும் வாக்கியத்தினைப் பார்த்து இடதுகையால் எழுதுக.**

ஓவியக் கலை மனத்திற்கு இன்பத்தைக் கொடுக்கும்.

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. அழகுணர்ச்சிக்கு விருந்தாக அமைவது
   i. ஓவியம் ii. சிற்பம் iii. கலைகள் iv. இசை
2. அஜந்தா ஓவியங்களை விடச் சித்தன்ன வாசல் ஓவியங்களே உறுதியுடன் அமைந்தவையென்று கூறுபவர்கள்.
   i. ஆராய்ச்சியாலர்கள் ii. ஆராய்ச்சியாழர்கள்
   iii. ஆராட்சியாளர்கள் iv. ஆராய்ச்சியாளர்கள்
3. குருவி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   i. குஞ்சு ii. அருவி iii. குருகு iv. பறவை
4. இயற்கையில் உள்ளவாறு ஓவியங்களை வரைவதற்கு ஓவியனுக்கு உதவுவன
   i. தூரிகைகள் ii. வண்ணங்கள் iii பலகைகள் iv. கடதாசிகள்
5. நுண்ணறிவு என்பதைப் பிரித்தெழுதினால் வருவது
   i. நுண்மை + அறிவு ii. நுன் + அறிவு iii. நுண்ண + றிவு iv. நுண் + அறிவு

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.**

1. மக்களின் அறிவு முதிர்ச்சியே கலைகளின் தோற்றத்திற்குக் காரணமாகும். [ ]
2. சித்திரமும் கைப்பழக்கம் என்பது பாரதியாரின் பொன்மொழி. [ ]
3. ஓவியந் தீட்டுவோனின் உள்ளம் தன் செயலில் நிலைத்திருப்பதால் மனம் சிதறாமல் ஆறுதலடையும். [ ]
4. பண்டைய தமிழகத்தில் ஓவியக்கலை உயர்வு பெற்றிருக்கவில்லை. [ ]
5. பலகணி என்பதன் ஒத்தகருத்துச் சொல் யன்னல். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 1. மணிமேகலை | இரவிவர்மா |
| 2. தஞ்சைப் பெருவுடையார் கோயில் | ஔவையார் |
| 3. ஓவியர் மணி | சித்தன்னவாசல் |
| 4. அமுதமொழி | சீத்தலைச்சாத்தனார் |
| 5. குகைக்கோயில் | இராசராச சோழன் |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ஓவியன் எதனால் இன்பமெய்துகின்றான்?

------------------------------------------------------------

2. முதல் ஓவியனை விட இரண்டாம் ஓவியனே சிறந்தவனென்று அரசனாலும் அறிஞராலும் போற்றப்படுவதற்குக் காரணமென்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. எத்தகைய முயற்சியின் பயனாகக் கலைகள் தோன்றின?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. எவ்வெவ் இடங்களில் தலைசிறந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. ஓவியர் இரவிவர்மாவைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

4x5=20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொற்களைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து இடைவெளிகளில் எழுதுக?**

[மலர்களைக், இயற்கைக், தேர்ச்சி, எத்தனையோ, பல்லவ, எல்லோராக், ஒவ்வொரு, இலைகளைக், அஜந்தா, நிலையை]

i. தமிழகத்தில் ------------------------------ மன்னர்கள் காலத்திலேயே வண்ண ஓவியங்கள் சிறந்த ---------------------------------------- எய்தியிருக்கின்றன.

ii. உலகில் -----------------வகையான இன்பந் தரும் ---------------காட்சிகள் இருக்கின்றன.

iii. ---------------------------------நாட்டினரும் ஓவியக் கலையைப் பெரிதும் விரும்பிப் பயின்று -------------------------------------- பெற்றிருக்கினறனர்.

iv. உற்ற ----------------------- ----------------------- குகைக்கோவில்களில் அழகிய ஓவியங்கள் பல விளங்குகின்றன.

v. கடலைக் காட்டுதற்கு நீல நிறமும் மரத்தின் ----------------காட்டுதற்கு பசுமை நிறமும் --------------------------- காட்டுதற்கு அவற்றின்சிறப்புகளும் இன்றியமையாதனவறோ?

2x5=10 புள்ளிகள்

08. **மேல் வரும் உரைப்பகுதியை அவதானமாக வாசித்துப் பொருத்தமான இடங்களில் அவற்றிற்குரிய நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

இரண்டாம் ஓவியன் புன்முறுவலுடன் அரசே குருவியைப் பிணைத்திருப்பது உண்மைதான் ஆனால் குருவி உண்மையன்று அதுவும் ஓவியம் தான் என்று விளக்கினான் இதைக்கேட்ட யாவரும் வெட்கி வியப்பில் மூழ்கினார்கள்.

10 புள்ளிகள்

09. **மேல்வருஞ் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. கோயில் :----------------------------------------------------------------------------------------

2. சிற்றூர் :----------------------------------------------------------------------------------------

3. செந்நூல் :----------------------------------------------------------------------------------------

4. தாமரை :----------------------------------------------------------------------------------------

5. வடிவம் :----------------------------------------------------------------------------------------

6. அறிஞர் :----------------------------------------------------------------------------------------

3x6=18 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தரப்பட்டுள்ள ஓவியத்தை நன்கு அவதானித்து விளங்கிக் கொண்டபின்அதனைப் பற்றிப் பத்து வாக்கியங்களுக்குக் குறையாமல் எழுதுக.



20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவர்க்காயப் பட்ட துயர்

இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

**01. மேல்வரும் மஹாகவியின் கவிதையைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

இவை தான் கவி எழுத ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்! சோலை கடல்
மின்னல் முகில் தென்றலினை மறவுங்கள் மீதிருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

பெரியரை வியத்தலும் இலமே.
சிறியரை இகழ்தல் அதனிலும் இலமே.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. வேதனையிற் கூட விளையும் சுகம் உள்ளதோ? என்பது
   i. வினாவாக்கியம் ii. கூற்றுவாக்கியம் iii. உணர்ச்சிவாக்கியம் iv. ஏவல் வாக்கியம்.
2. "உவகையோடு உட்கார்ந்தான்" என்பதில் உவகை என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   i. மகிழ்ச்சி ii. கோபம் iii. வெறுப்பு iv. துன்பம்
3. கோழி கொக்கரிக்கும் என்பது போல மயில்
   i. கத்தும் ii. கூவும் iii. சீறும் iv. அகவும்
4. தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல வாழையின் பிஞ்சு
   i கச்சல் ii. வடு iii. மூசு iv. குலை
5. சிற்றுலகு என்பதைப் பிரித்தெழுதினால் வருவது
   i. சிறு + உலகு ii. சிறுமை + உலகு iii.சிற்று + லகு iv. சிற் + உலகு

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. அடவி, ஆரணியம், கானம், கரம், வனம் என்பவை காடு என்ற ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும். [ ]
2. நசை என்பதன் ஒத்தகருத்துச் சொல் வெறுப்பு. [ ]
3. மற்றவர்க்காய்ப் பட்டதுயர் என்ற பாடலைப் பாடியவர் பாரதியார். [ ]
4. சாதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் காதல். [ ]
5. பேரின்பம் என்பதைப் பிரித்தெழுதினால் வருவது பெருமை + இன்பம். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. மேல்வருஞ் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. பெருங்காப்பியம் :--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. பூங்கொத்து :--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. வேறொருவன் :--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. நெட்டை நிலம் :--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

5. நாலிலொன்று :--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சிட்டெழிலூர் என்று சொல்லப்படுகின்ற ஊரின் முன்னைய பெயர் என்ன?

--------------------------------------------------------------------------------

2. வெற்றிலை என்பதைப் பிரித்து எழுதுக.

--------------------------------------------------------------------------------

3. சின்னக் கிழவன் சிற்றுலகை மறந்து துயில்வதைக் கண்ட கவிஞரின் மனநிலை எவ்வாறிருந்தது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. எமக்கு இன்பம் பயப்பது எது?

--------------------------------------------------------------------------------

5. நாம் எதற்காக முதியவர்களைக் கனம் பண்ண வேண்டும்?

--------------------------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் கவிதையை வாசித்து பின் அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

நீண்ட நெடு வரிசையில்
கால் கடுக்க நிற்கின்றேன்
ஒரே ஒரு றாத்தல்
பாண் வாங்குவதற்கு.

காத்திருந்த அலுப்பினால்
திரும்பிப் பார்த்தேன்
புதிதாய் ஒரு பூ
என் பின்னே
சுடு புழுதியிற் போட்ட
செந்தாமரை மலராய்
இடப்பெயர்வின் கொடுமைதனைப்
படமெழுதிக் காட்டியது
அந்தப் பிஞ்சு முகம்

யார் பெற்ற பிள்ளை?
எத்தனை நாள் பட்டினி?
பொருளிழந்த இடம் பெயர்ந்த
போதும்
அருள் இழந்திடாத இதயத்தில்
நீர் கசிந்திட,
சின்னவனை முன்னே விட்டுப்
பின்னால் நின்றேன் நான்.

முன்னே நின்று வாங்கியவர்
தெரு வோரத்திலும் தெரிந்த மனிதர்
தாழ்வாரங்களிலும் தங்கியிருக்கும்
உறவுகளுடன் கூடி உண்ண
விரைகின்றார்.

வரிசையில் அந்தச்
சிறுவன் வாங்கினால்
அடுத்தது எனது முறை.

அந்தோ
அவனோடு பாண் முடிந்து விட்டது.
ஐந்நூறு றாத்தலும் சரி
இனிநாளைக்குத்தான்
அனுதாபங் கலந்த
குரலில் கூறினார் வெதுப்பகர்.

மீண்டும் நாளை வருவேன்
நாளையும் எனக்குப் பாண்
இல்லாமற் போகலாம்.

பிறவுயிர் பார்த்திருக்க
மருந்தும் உண்ணா
மரபுதித்தோர் நாம்.

1. இக்கவிதையில் கூறப்படும் பிரதான கருத்து யாது?

2. பாண் வாங்குவதற்காக வரிசையில் காத்து நின்றவர் தன் பின்னால் நின்ற சிறுவனை எதற்காக முன்னால் விட்டார்?

3. சின்னவனின் முகம் எதனை உணர்த்தியது?

4. பிறவுயிர் என்பதைப் பிரித்து எழுதுக.

5. இக்கவிதைக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மேல்வரும் எதுகைச் சொல் அடவணையைப் பூர்த்தி செய்க.

| நகை | இசை | சாலை | படம் | ஆடை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12 புள்ளிகள்

09. தற்பொழுது புழக்கத்திலுள்ள ஐந்து வடமொழிச் சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. சரஸ்வதி ..............................
2. விசம் ..............................
3. புத்தகம் ..............................
4. பாடசாலை ..............................
5. விவாகம் ..............................

1x5=5 புள்ளிகள்

10. உங்கள் வாழ்வில் ஏற்பட்ட உணர்வனுபவமொன்றைச் சிறு கவிதையாக எழுதுக.

..............................

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கை காட்டிய வழி

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.*
*எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் பாடற்பகுதியைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

மணிமுடியில் தொல்காப்பியம் வீற்றிருக்கும்
திருவடியிற் சிலம்போசை பாட்டிசைக்கும்
அணிமுத்து மாலை எட்டுத் தொகையாகும் - அவள்
ஆட்சி செய்யும் செங்கோலே குறளாகும், திருக்குறளாகும்

---

---

---

---

3 புள்ளிகள்

**02. மேல்வரும் நூற்பாவினை இடதுகையால் எழுதுக.**

அறம் பொரு ளின்பம் வீட்டைதனூற் பயனே

---

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பெரிய கப்பல்களில் திசை பார்க்கவும் காவல் காக்கவும் உதவுகின்ற இடம்
   i. புறாக்கூடு ii. ஸ்கன்டினேவியா iii. காகக்கூடு iv. காவலரண்
2. வாழ்வு என்பதன் எதிர்கருத்துச் சொல்
   i. இறப்பு ii. பிறப்பு iii. தாழ்வு iv. உயர்வு
3. பண்டிதன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
   i. வண்டியன் ii. பண்டிதை iii. பாதகி iv. ஞானவதி
4. வானத்தை அண்ணாந்து பார்த்து "வானிலை இன்று சரியில்லை நாளைக்குப் புயல் வீசும்' என்று கூறியவர்
   i. நீல்ஸ் ii. மணியன் iii. மாலுமி iv. ஓலா்.ப்
5. காக்கை பிடித்து அடைக்கும் பழக்கம் கைவிடப்படுவதற்குக் காரணமாக அமைந்த கண்டுபிடிப்பு
   i. காந்தஊசி ii. தொலைநோக்கி iii. நுணுக்குக்காட்டி iv. தொலைக்காட்சி

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

1. தனிவாக்கியங்கள் இரண்டையேனும் பலவற்றையேனும் இணைப்பதால் தொடர்வாக்கியம் அமைகிறது. [ ]
2. எல்லோரும் புகழ்வதைக் கேட்க வந்தது [ ]
3. எதிர்க்கருத்து என்பது சொற்களைப் பயன்படுத்தும் சூழலைப் பொறுத்தே பெரும்பாலும் அமையும். [ ]
4. நிகழவிருப்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்குப் பிராணிகள் மனிதனுக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. [ ]
5. "வைகிங்ஸ்" பட்டத்தாரின் பிரதான தொழில் விவசாயம் [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. ஆத்திகன் | இரு பிரதான கருத்தை மட்டும் கூறுவது |
| 2. அமிர்தம் | காக்கைக்கூடு |
| 3. தீபகற்பம் | இறைவனை நம்புபவன் |
| 4. தனிவாக்கியம் | மூன்று பக்கமும் கடலாற்சூழப்பட்ட நிலப்பகுதி |
| 5. நீல்ஸ் | மூத்தோர் சொல் |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. "அதை நான் இப்பொழுது சொல்ல மாட்டேன். ஆனால் கடலில் வழிகாட்ட அது உதவும் அண்ணா!' என்று யார் யாரிடம் கூறினார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

2. மீனவர்கள் எல்லாரும் ஓலா.ஃபையும் நீல்ஸையும் எதற்காகக் கிண்டல் செய்தார்கள்.

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. நீல்ஸ் தான் கொண்டுவந்த கூடை கடலில் வழிகாட்ட உதவும் என்று சொன்னபோது படகுத் தலைவன் எனன் சொன்னான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. படகுத்தலைவன் எங்கே உன் திசை காட்டும் கருவி என்று கேட்ட பொழுது நீல்ஸ்என்ன செய்தான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. நீல்ஸ் எதற்காக வெட்கப்பட்டான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வருஞ் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. கொடிமரம் :

2. வெள்ளப்பெருக்கு :

3. புத்திக்கூர்மை :

4. எதிர்த்திசை :

4x3=12 புள்ளிகள்

**08. தரப்பட்டுள்ள தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.**

1. மலையாளத்தில் புகழ் பெற்ற நாவலாசிரியர் தகழி சிவசங்கரன்பிள்ளை.
தகழி சிவசங்கரன்பிள்ளை "செம்மீன்" என்ற நாவலை எழுதினார்.
சுந்தரராமசாமி செம்மீன் நாவலைத் தமிழிலே மொழிபெயர்த்தார்.

2. யூத மக்களின் தாய்நாடு இஸ்ரேலாகும்.
பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அகதியாய் அலைந்து அவலப்பட்ட யூத மக்களின் கதையைக் கூறுவது எக்ஸ்ஸேடிாஸ் என்ற நாவலாகும்.
அருளான் எக்ஸ்ஸோடஸ் நாவலைத் தாயகம் நோக்கிய பயணம் என்ற பெயரில் மொழிபெயர்த்தார்

3. வொல்காவிலிருந்து கங்கைவரை என்பது கி.மு. 6000 முதல் கி.பி. 1942 வரையான மனித வரலாற்றைச் சிறுசிறு கதைகளாகக் கூறும் நூலாகும்.
பேராசிரியர் ராகுல சங்கர்த்தியாயன் வொல்காவிலிருந்து கங்கைவரை என்ற நூலை எழுதினார்.
கண. முத்தையா வொல்காவிலிருந்து கங்கைவரை என்ற நூலைத் தமிழிலே மொழி பெயர்த்தார்.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. தரப்பட்டுள்ள தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக எழுதுக.**

i. போரினால் இடம் பெயர்ந்து இன்னல்களளை அனுபவித்த மக்கள் சமாதானத்தை வரவேற்றார்கள்

---

---

ii. புல்லை உண்டு பாலைத்தரும் பசுக்களை மனிதரில் சிலர் கொன்று புசிப்பது கொடிய பாவமாகும்.

---

---

iii. தாயின் மடியில் முகம் புதைத்த பூங்கோதை அம்மாவின் மடிதான் என்க்கு உலகம் என்று கூறினாள்.

---

---

15 புள்ளிகள்

**10. மேல்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதனைப் பற்றிக் கட்டுரை எழுதுக.**

1. நான் விரும்பும் தொழில்
2. பொது அறிவினைப் பெற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மைகள்.
3. எனது பொழுது போக்குகள்.
4. பாடசாலை நூலகம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாஞ்சாலி சபதம்

இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

**01. மேல்வரும் திருமந்திரப் பாடலைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனில் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம் ஓதான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகி நில்லானே.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2 புள்ளிகள்

**02. மேல் வரும் நூற்பாவினைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

---------------------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. துரியோதனன் அரசு செய்த நாடு.
   i. அத்தினாபுரம் ii. இலங்கை iii. ஸ்கன்டினேவியா iv. பிரான்ஸ்
2. மனைவி, சகோதரர், நாடு அனைத்தையும் சூதாடி இழந்தவர்.
   i. தருமர் ii. சகுனி iii. விதுரர் iv. வீமன்
3. "தீங்கு தடுக்குந் திறமிலேன் என்றந்த மேலோன் தலைகவிழ்ந்தான". இங்கே மேலோன் என்று சொல்லப்படுபவர்.
   i. திருதராட்டினன் ii.வீட்டுமர் iii. விஜயன் iv. கண்ணன்
4. ஒவ்வொருவர் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
   i. ஒன்று+ஒருவர் ii. ஒருவர்+ஒருவர் iii. ஒவ்+ஒருவர் iv.ஒவ்வொ+ருவர்
5. அவனி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   i. ஆவணி ii. உலகம் iii. உலகம் iv. வீடு

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் 'பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. இரட்டைக் கிளவி இசைபற்றியும் பண்புபற்றியும் குறிப்புப்பற்றியும் வரும். [ ]
2. இரட்டித்த சொற்கள் பிரிந்து நின்றும் பொருள் தரும். [ ]
3. தாதி என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் அடிமை. [ ]
4. துரியோதனன் சபைக்கு வந்த திரௌபதி நீதி கேட்டழுதாள். [ ]
5. பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. சீதை | சூதிலே வல்லன் |
| 2. விதுரர், வீட்டுமர் | துச்சாதனன் |
| 3. சகுனி | பணிவென்பது அறியாதவன் |
| 4. துரியோதனன் | மந்திரம் உணர்ந்த பெரியோர் |
| 5. பாவி | செந்திரு |

1x5=5 புள்ளிகள்

**06. பின்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. சூதாட்டம் :------------------------------------------------

------------------------------------------------

2. வஞ்சனை :------------------------------------------------

------------------------------------------------

3. பொறாமை :------------------------------------------------

------------------------------------------------

4. நேர்மை :------------------------------------------------

------------------------------------------------

5. வெஞ்சினம் :------------------------------------------------

------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் இரட்டைக் கிளவிகளின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. துடி துடி :

2. நற நற :

3. சர சர :

4. பொலு பொலு:

5. மள மள :

6. விறு விறு :

3x6=18 புள்ளிகள்

**08. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. துரியோதனன் ஏன் குதூகலித்தான்?

2. பாஞ்சாலி நீதி கேட்டழுதபோது அவளது கணவர் என்ன செய்தனர்?

3. "சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்" என்று யார் யாருக்குக் கூறினார்?

4. "முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை" என்று வீட்டுமாச்சாரியன் கூறுபவை யாவை?

5. இரட்டைக் கிளவிகள் ஐந்து தருக.

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. மேல்வரும் பாடலை அவதானமாக வாசித்துப் பொருத்தமான இடங்களில் அவற்றிற்குரிய நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்
தக்கதுநீர் செய்தீர் தருமத்துக் கிச்செய்கை ஒக்கும்
எனக்கூறி யுகந்தனராம் சாத்திரிமார்
பேரரசு செய்தால் மன்னவனைச் சூதாட வற்புறுத்திக்
கேட்டது தான் வஞ்சனையோ நேர்மையோ

10 புள்ளிகள்

**10. கீழே தரப்பட்டுள்ள கதை மாந்தர்கள் வாயிலாகப் பாஞ்சாலி சபதத்தில் கூறப்பட்டுள்ளவற்றை உரைநடையில் சுருக்கி எழுதுக.**

திரௌபதி:------------------------------------------------------------

துச்சாதனன்:------------------------------------------------------------

வீட்டுமன்:------------------------------------------------------------

பாஞ்சாலி:------------------------------------------------------------

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலவரும் வறுமையும்

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

குலமகள் வாழும் இனிய குடும்பம் கோயிலுக்கு இணையாகும்
முறைதெரியாமலே உறவு கொண்டாலே வாழ்வும் சுமையாகும்.
படித்த மாந்தர் நிறைந்த நாட்டிற் பார்க்கும் யாவும் பொதுவுடைமை

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடல் வரிகயைப் பார்த்து இடதுகையால் எழுதுக.**

எழுத்தறியத் தீரும் இழி தகைமை.

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. செங்கால் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
   i. செங் + கால் ii. செம்மை + கால் iii. செந் + கால் iv.சே + கால்
2. வழுதி எனக் கூறப்படுபவன்
   i. சேரன் ii. சோழன் iii.பாண்டியன் iv. கஜபாகு
3. புலவர் நாரைகளை யாரிடம் தூது போகுமாறு பாடலிற் கூறுகின்றார்
   i. அரசனிடம் ii. தன் மனைவியிடம் iii. ஜனாதிபதியிடம் iv. அதிகாரியிடம்.
4. புலவர் தமது நிலைக்கு உவமானமாகக் குறிப்பிடுவது
   i. பெட்டிப்பாம்பு ii. கூண்டுக்கிளி iii. சுதந்திரப்பறவை iv. காகம்
5. தூது போகும் ஒருவரைப் புகழ்ந்தால் அவர் மனம்
   i. துன்பப்படும் ii. மகிழ்ச்சியடையும் iii. கோபங்கொள்ளும் iv. வெட்கப்படும்.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. கூடல் என்று கூறப்படுவது மதுரை மாநகரம். [ ]
2. தமது செய்யுளைக் கேட்ட நாரைகள் அவ்விதமே செய்யுமெனப் புலவர் எதிர்பார்த்தார். [ ]
3. புலவர் தமது வறுமை காரணமாகப் பாண்டியனிடம் பரிசு பெற வந்தார். [ ]
4. பாண்டியன் நாரையின் அழகைப் புகழ்ந்தான். [ ]
5. சத்திமுற்றப் புலவர் பிற்காலத்தில் பாண்டியமன்னனின் அரசசபைப் புலவரானார் . [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. உயர்திணை | படர்க்கை |
| 2. ஆன் | பலவின்பால் |
| 3. காகங்கள் | பனங்கிழங்கு |
| 4. அவன் | ஆண்பால் விகுதி |
| 5. நாரையின் அலகு | தலைவன் |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. புலவரின் அவல நிலையைப் பாண்டிய மன்னன் எவ்வாறு அறிந்துகொண்டான்?

---

---

2. புலவர் பாண்டிய மன்னனைச் சந்திக்க முடியாது துன்பப்பட்டமைக்குக் காரணமென்ன?

---

---

3. ஓரூர் என்பதைப பிரித்தெழுதுக.

---

4. பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் இதில் வந்துள்ள அணி யாது?

---

5. நனை சுகர்க் கூரை கனை குரற் பல்லிப் பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு. என்ற தொடரின் பொருளை உரைநடையில் எழுதுக.

---

---

---

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. தரப்பட்டுள்ள சொல்லிலக்கண அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| | சொல் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | அவன் | | ஆண்பால் | | படர்க்கை |
| 2 | மாமா | | | | |
| 3 | பாடகி | உயர்திணை | | | |
| 4 | கரைந்தது | | | ஒருமை | |
| 5 | பறவைகள் | | | | |

12 புள்ளிகள்

**08. மேல்வரும் உவமைத் தொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. கண்ணை இமை காப்பது போல:------------------------------------------------

------------------------------------------------------------------------

2. விசையுறு பந்தினைப் போல:------------------------------------------------

------------------------------------------------------------------------

3. பாலும் தேனும் போல:------------------------------------------------

------------------------------------------------------------------------

4. சுடுபுழுதியிற் போட்ட செந்தாமரை போல்:------------------------------------------------

------------------------------------------------------------------------

5. பொன் போல்:-.------------------------------------------------

------------------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்

**09. தரப்பட்டுள்ள கடிதத்தை வாசித்து அதற்குப் பதில் எழுதுக.**

யாழ்ப்பாணம்.

20-12-2003

அன்புள்ள வினோதினிக்கு, வணக்கம்.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் நாங்கள் நல்ல சுகமாக இருக்கின்றோம். உங்கள் எல்லோருடைய சுகத்திற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்தக் கடிதத்தில் உங்களுக்கு நான் ஒரு குட் நியூஸ் சொல்லப்போகின்றேன். எங்கட கொம்பியூட்டருக்கு இன்ரநெற் இணைப்புக் கிடைத்துவிட்டது. எனவேதே அந்த மகிழ்ச்சியான செய்தியாகும். எங்கட சித்தப்பாதான் காசு செலவழித்து இணைப்பு எடுக்கிறதுக்கு பாடுபட்டவர். இனி வருங்காலத்தில் கணனி ஒரு கற்பித்தல் சாதனம் என்பதை விட கற்றல் சாதனம் ஆகிவிடும் என்று சித்தப்பா சொன்னவர். உண்மைதான். வினோதினி இணையத்தின் வாயிலாக நாங்கள் எவ்வளவோ விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

எங்களுக்கு இன்ரநெற் இணைப்புக் கிடைத்த அன்றுதான் ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சதாம்உசேன் கைது செய்யப்பட்டார். எல்லா வெப் தளங்களும் அந்தச் செய்தியை வெளியிட்டன. நான் யாகூ (Yahoo) என்ற வெப்தளத்தில் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இணையத்தைப் பற்றி எட்டாந்தரத்தில் செய்தியாகப் படித்தவற்றைத் தற்பொழுது செயல் முறையில் கற்கின்றேன். இலங்கையின் பல பாகங்களிலும், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள தோழிகளுடன் இணையத்தினூடாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். தற்பொழுது yahoo மெஜன்சரில் அனேகம்பேர் ஒன் லைனில் உள்ளனர்.

இவர்களில் கண்டியைச் சேர்ந்த மாலிகாவுடன் நான் தொடர்பினை ஏற்படுத்தி இப்பொழுது நல்ல தோழிகளாக இருக்கின்றோம். எனக்குரிய பாஸ்வேட்டை கிறியேற் பண்ணிய பின் யாகூ ஒன்லைனில் மாலிகா என்ற பெயரைப் பார்த்ததும் அவ ஒரு தமிழ்ப் பிள்ளை என்றுதான் நினைத்தேன். தொடர்பு கொண்ட பின்னர் தான் அவ ஒரு சிங்களப் பிள்ளை எனத் தெரிய வந்தது. சிங்களவர் என்றால் பொடிமெனிக்கே, அப்புகாமி, புஞ்சிபண்டா என்ற பெயர்கள் தான் எங்களுக்குப் பரிச்சயம். ஆதலால் மாலிகாவை நான் மட்டுக்கட்டவில்லை. மாலிகாவின் கணனியுடன் கெட்போன் வசதியுள்ளது. எனக்கு இல்லை. இந்தமாதம் சம்பளம் கிடைத்ததும் கெட்போன் வாங்கித் தருவனெண்டு அம்மா சொன்னவ. கெட்போன் வாங்கினால் மாலிகாவுடன் குரல்வழியாகக் கதைக்கலாம். இப்பொழுது கீபோட்டில் டைப் செய்துதான் கதைக்கிறேன்.

வினோதினி உங்களை நேரில் பார்க்க ஆசையாக உள்ளது. பள்ளிக்கூடம் தொடங்க இன்னும் 15 நாட்கள் உள்ளன. எனக்கு உங்களிடம் வர நல்ல விருப்பம். ஆனால் அப்பா விடமாட்டார். இன்ரநெற் இணைப்பு எடுத்ததற்கே எல்லாரும் சேர்ந்து என்ர பிள்ளையின்ர படிப்பைக் குளப்பிறியள் எண்டு சித்தப்பாவைப் பேசினவர். இந்த நிலையிலை பயணம் போவதைப் பற்றி அப்பாவிடம் கேட்கவே முடியாது.

வினோதினி நாங்கள் கல்வியைப் பெரிதென்று கருதிக் கற்கின்றோம். கல்வியின் அடிப்படையே டிசிப்பிளின்தான் என்று சேர் சொன்னதை ஒருபோதும் நாங்கள் மறக்கக்கூடாது. வாய்ப்பு வரும்போது நாங்கள் நேரில் சந்திப்போம். அதுவரை அன்பு கலந்த வணக்கம் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,
உங்கள் நேசமுள்ள
ஞா. மணிமேகலை.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒரு தாய் தன் பிள்ளைக்குப் புத்திமதி கூறும் காட்சி படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதேபோன்று உங்களுடைய அம்மா உங்களுக்குக் கூறிய நல்ல புத்திமதியினை எழுதுக.



20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த நூற் பரீட்சை - I

தரம் - 9 பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை பாடநூலில் எந்தப் பாடத்தில் எந்தப் பக்கத்தில் எந்தப் பந்தியில் எந்தப்வரிகளில் உள்ளன என்பதைப் பாடநூலை அவதானமாக வாசித்து எழுதுக.

**01. சிறுகுழந்தை விழிகளிலே ஒளியாய் நின்றாள்.**

பாடம் :

பக்கம்: பந்தி : வரிகள்:


----------------------------------------

----------------------------------------

5. 1986 இல் தோன்றிய ஹேலியின் வால்வெள்ளியைப் பார்ப்பதற்கு மக்கள் ஆர்வம் காட்டியது ஏன்?

----------------------------------------

----------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் இணைமொழித் தொடர்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

i. அருமை பெருமை :---------------------------------------------------------------

---------------------------------------------------------------

ii. பழக்க வழக்கம் :---------------------------------------------------------------

---------------------------------------------------------------

iii. பேரும் புகழும் :---------------------------------------------------------------

---------------------------------------------------------------

4x3=12 புள்ளிகள்

**08. மேலே தரப்பட்டது விண்வெளி ஆய்வு தொடர்பாகப் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியாகும். இதேபோல் விண்வெளி தொடர்பாக நீங்கள் அறிந்த வேறு ஒரு செய்தியினை எழுதுக.**

### செவ்வாய்க் கிரகத்தில் கடல் இருந்த அடையாளம்

செவ்வாய்க் கிகரகத்தில் கடல் இருந்ததற்கான அறிகுறி இருப்பதாகவும் இதனால் இங்கு உயிரினம் வாழ்ந்திருக்கலாம் எனவும் அமெரிக்காவின் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவாய்க்கிரகத்தில் உயிரினங்கள் இருந்தனவா? உயிரினங்கள் இருக்க வாய்ப்புள்ளதா? என அறிய அமெரிக்காவின் 'நாஸா' விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக 'ஒப்பர்சூனிட்டி' ஓடத்தை செவ்வாய்கிரகத்துக்கு அவர்கள் அனுப்பியுள்ளனர்.

செவ்வாய்க்கிரகத்தில் உப்புச் செறிந்த கடல் இருந்திருக்கலாம். அந்தக் கடற்கரையின் ஓரத்தில் விண் கலம் தரித்து நிற்கலாம் என நாங்கள் அனுமானிக்கின்றோம். எனவே அங்கு உயிரினங்கள் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என கர்னல் பல்கலைக்கழகத்தின் முதல்வரும் செவ்வாய்க்கிரக ஆய்வாளருமான ஸ்டீவ்ஸ் கொயர்ஸ் கூறியிருக்கின்றார். மேலும், உப்பினாலான பாறைகள் உருகி இருப்பதாகவும் அதன் நடுவில் ஒப்பர்சூனிட்டி விண்கலம் நிற்பதாகவும் ஸ்டீவ் கூறியிருக்கின்றார்.

செவ்வாய்க்கிரகத்தில் அழிவை உண்டாக்கக் கூடிய கிருமிகள் அல்லது நுண்ணுயிர்கள் ஏதும் வாழ்ந்தனவா? என ஆராய்ச்சி மேற்கொள்ள ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. தரப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலைப் பூர்த்தி செய்க.**

# இடைநிலை மாணவர் மன்றம்

காலம்:-------------------------------------------- இடம்:--------------------------------------------

தலைவர்--------------------------------------------

## நிகழ்ச்சிகள்

01. இறைவணக்கம்

02. தமிழ்மொழி வாழ்த்து

03. --------------------------------------------

04. --------------------------------------------

05. -------------------------------------------- தரம் 7 மாணவிகள்

06. --------------------------------------------

07. --------------------------------------------

08. கோலாட்டம்: --------------------------------------------

09. --------------------------------------------

10. நாடகம் --------------------------------------------

11. --------------------------------------------

12. வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களைக் கௌரவித்தல்.

13. --------------------------------------------

14. சபையோர் குறிப்புரை :- --------------------------------------------

15. நன்றியுரை :--------------------------------------------

.................................................... ....................................................

தலைவர் செயலாளர்.

....................................................

பொறுப்பாசிரியர்.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **ஆரோக்கிய வாழ்வைக் கருத்திற் கொண்டு தொற்றுநோய்களில் இருந்து தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள மக்கள் எப்பொழுதும் கொதித்தாறிய நீரையே பருகவேண்டும் என்பதை வலியுறுத்தி மக்களுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் ஒரு துண்டுப் பிரசுரம் எழுதுக.**

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காயுமே

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் நூற்பாவினைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

"ஏழியல் முறையது எதிர்முக வேற்றுமை
வேறுஎன விளம்பான் பெயரது விகாரம்என்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பழமொழியினைப் பார்த்து இடதுகையால் எழுதுக.**

"அகத்தின் அழகு முகத்திலே தெரியும்"

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. சுற்றிச் சூழ்ந்த அனற் காட்டிலிருந்து விடுதலை இல்லை. இங்கே அனல் என்று குறிப்பிடப்படுவது
   i. மரம் ii. நெருப்பு iii. நீர் iv. இருட்டு
2. எத்தனை எத்தனை விசித்திரமான உயிர் வகைகள் இந்த உலகில் வாழ்கின்றன! இங்கே எத்தனை எத்தனை என்பது
   i. அடுக்கிடுக்குத்தொடர் ii. உவமைத்தொடர் iii. மரபுத்தொடர் iv. அடுக்குத்தொடர்
3. தவிட்டிலிருந்து வெளியிலே மெல்ல நெளிந்து வந்தது ஒரு புழு என்ற வாக்கியத்தின் எழுவாய்.
   i. தவிடு ii. மெல்ல iii. புழு iv. வந்தது
4. குனிந்து புழுவைப் பரிவோடு எடுத்து நிழலில் விட்டார் என்ற வாக்கியத்தின் செயப்படுபொருள்.
   i. பரிவோடு ii. புழுவை iii. நிழலில் iv. விட்டார்
5. ஆறாம் வேற்றுமை உணர்த்தும் பொருள்
   i. ஒப்புப்பொருள் ii. உடைமைப்பொருள் iii. எல்லைப்பொருள் iv. செயப்படுபொருள்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. பெயர்ச்சொல்லின் சிறப்பியல்பு வேற்றுமை ஏற்றலாகும். [ ]
2. மற்றைய உயிர்களைப் போலவே மனிதனது வாழ்வு வரம்புகளுக்குட்பட்டது. [ ]
3. எலும்பில்லாத புழுவுக்கு வெயில் கொடுமை செய்யாது. [ ]
4. மனிதனுக்கு இயல்பிலேயே அன்பு என்ற பண்பு இல்லை. [ ]
5. எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை. [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. உயிர் | நன்மை |
| 2. சமுதாயம் | மனிதன் |
| 3. வெயில் | அன்பு |
| 4. செவிசாய்த்தல் | அறம் |
| 5. தருமம் | இணங்கிக்கேட்டல் |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. தருமத்தின் வழியிலே ஒவ்வொரு மனிதனும் வாழப்பழகிக் கொள்வதால் ஏற்படும் நன்மை ஒன்று கூறுக.

------------------------------------------------------------

2. வாழ்க்கை என்று எண்ணவேண்டியிருப்பது எதனை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. ஒவ்வொரு உயிரும் பாதுகாத்து வளர்க்கவேண்டியவை எவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. அன்பில்லாத மனிதன் எதனால் துன்பமடைவான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. திருவள்ளுவர் திருக்குறளை எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது எது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்

**07. மேல்வரும் நூற்பாவின் பொருளை உரைநடையில் எழுதுக.**

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கு மீறாய் பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை"

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

12 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பாடசாலை நூலகத்தில் சஞ்சிகை ஒன்றைப் படிக்கும் போது அதை வாசித்த தமது வகுப்பாசிரியை கண்கலங்கி அழுவதை அவதானித்த மாணவி ஒருவர் "ஏன் ரீச்சர் அழுகிறீங்கள்?" என்று வாஞ்சையுடன் கேட்டார். அதற்கு அந்தஆசிரியை தான் படித்த கவிதையை அம்மாணவியிடம் கொடுத்தார். அந்தக் கவிதை இங்கே தரப்படுகிறது.**

**காலமள்ளிய பிரிவும்**
**மீண்டுமொரு காலைப்பொழுதும்.....**

மீண்டும் உன் ஊர்கள் கடந்து
பயணிக்கும் பாக்கியம் எனக்கு
அதிகாலையில்
அந்தி மாலையில்,
நள்ளிரவிற் கூடப் போய் வருகிறேன்.
இருபது வருடங்களுக்குப் பின்னான உலா.

உன்னுடையதென இன்றுவரை நீயும்,
என்னுடையதென நேற்றுவரை நானும்
மனதில் பூவெறிந்து மகிழ்ந்த
ஊர்களைக் கடக்கும் ஒவ்வொரு தடவையும்
நெஞ்சில் முள்ளேறி வலிக்கிறது.
என் காதற்கிராமங்களென இருந்த
இவ்வூர்களை அந்நியமாக்கிய
கொடுமையையெண்ணி
உள்ளே அழுதபடியிருப்பேன்
வாகனத்தின் உள்ளே.
சாரதிக்குத் தெரியுமா என மனக்கிளர்வு?
"ஐயா இனிச் சிங்களவங்க ஊர்கள்" என
அவதானமாய் விரைவான்.
ஊர்களின் அழகிற் கிறங்கி
நான் குறிப்பதறியாது,
"கண்ணாடிகளை உயர்த்துங்கள் ஐயா" என்று
கட்டளை வேறு,
இந்தக் கிராமங்களிலெல்லாம்
இருந்தேன் நானென்பது
அவனுக்கெங்கே தெரியும்?
பயண வழியில் இருளிருந்த காலையில்
நிலம் வெளிக்காத நேரத்தில் ஒரு நாள்
பனிபூசிய தெரு மீது இறங்கி
திறந்திருந்த கடையில் தேநீர் பருகினேன்.
குடித்து வெளிவந்த போதும் குளிரிருந்தது,
தூரத்தெரிந்த மலையுச்சியில்
புகாரிடை தெரிந்தார் புத்தபெருமான்
வெள்ளைச் சிலையில் மட்டும் வெளிச்சமிருந்தது.
நாற்சந்தியில் ஒருதூபி
தர்மசக்கரம் அதன் தலையிலிருந்தது
கையிற் கமரா இருந்தும்
படமெடுக்கப் பயம்.
தமிழனிங்கு படமெடுப்பது தண்டனைக்குரியதாம்.
ஆசையை உள்ளே அடித்திருத்திவிட்டு
கண்களைத்தான் கமராவாக்க முடிந்தது.
என் விதியெண்ணிய கோபமாய்
மேலே வானம் சிவந்து வந்தது.
காலைக்கு வரவு கூறும் காகங்கள் மட்டும்
இங்கேன் இல்லாமற் போனது?
காகங்களாற்றான் காலை வடிவு பெறுகின்றது.
இத்தனை அழகிருந்தும்
காகங்கள் இல்லாமை குறையெனப்பட்டது.

புத்த பிக்குகளிருவர் கடந்தபோது
ஒருவர் புன்னகை வீசிப்போனார்.
பதிலுக்கு நானுமொரு சிரிப்பெறிந்தேன்.
இருபது வருடங்களுக்குப் பின்னர்
என் மீது பரவிய சிங்களச் சிரிப்பு.
அந்தச் சிரிப்பு மொழியின் அர்த்தம்
எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்
எனக்கது வாசம் பூசிற்று.

ஆனையிறவில் செத்துக் கிடந்த
சிப்பாய்களிடையே
இந்தவூரைச் சேர்ந்தவனும் இருந்திப்பானோ?
மந்துவிலில் குண்டெறிந்த விமானமோட்டி
இந்தவூர்காரனாகவும் இருக்கலாம்.
நானிங்குலவிய நாட்களில்
சிறுவராய் அவர்கள் திரிந்திருக்கலாம்.
வன்மம் களைய வந்தவரே
இனவாத வலையிற் சிக்குண்டபோது
என்னால் என்ன செய்ய இயலும்?
எல்லாம் தலைகீழாகிப்போனது
"வெலாவ கீயத?"
தலையில் மரக்கறிச் சாக்குச் சுமந்த சிறுவன்
மணி கேட்டான்.
சொன்னேன்.
நன்றி சொல்லி சிரிப்புதிர்த்துப் போனான்.
மிகிந்தலையே!
சின்னக் கிராமமாய் நீயிருந்த போது
உன்னில் சில நாள் தங்கினேன்.
நினைவிருக்கிறதா?
என்னை வீட்டுக்கழைத்து
விருந்தளித்த விமலசேனா!
சந்தியில் நின்று தேடுகின்றேன் இன்று
உன் வீடிருந்த இடம் தெரியவில்லை.
எங்குள்ளாய் நண்பா?
கத்திஅழ வேண்டும் போல
கனக்கிறது நெஞ்சு.
என்னவாய் எழில் கொண்டு இலங்கினோம்?
இப்படி அடி விழுந்து சிதறிப்போனோமே?
ஒட்டுப்போட முடியாத உடைவு
சத்திரச்சிகிச்சைதான் சரிவருமோ?
"போவோம் ஐயா!" என்றான் சாரதி.
மிகிந்தலையே!
விமலசேனாவே!
உம்மைப் பிரிந்து போகிறேன், மனமின்றி.
என்னை யாரென்று தெரியாமல்
பிள்ளைளகள் எனக்குக் கையசைத்துப்
போகின்றனர், பள்ளிக்கு,
விடைகொண்டு விரைகிறது
என் வாகனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதையை மீண்டுமொருமுறை படித்துவிட்டுக் கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. கவிஞர் பயணஞ் செய்த வாகனச் சாரதிக்குத் தெரியாத விடயங்கள் எவை?

2. கவிஞருக்கு வாசம் பூசிய நிகழ்வாகக் கவிஞர் எதனைக் கருதுகின்றார்?

3. "வெலாவ கீயத?" என்பதைத் தமிழில் எழுதுக?

4. கவிஞரிடம் "மணி எத்தனை?" என்று கேட்டு அறிந்து கொண்ட சிறுவன் பதிலுக்கு என்ன செய்தான்?

5. "கத்தி அழவேண்டும் போல கனக்கிறது நெஞ்சு" என்று கவிஞர் கூறுவதற்குக் காரணம் என்ன?

3x5=15 புள்ளிகள்

09. "என்னை யாரென்று தெரியாமல்

பிள்ளைகள் எனக்குக் கையசைத்துப்

போகின்றனர் பள்ளிக்கு." **என்று எட்டாவது வினாவில் தரப்பட்ட கவிதையில் கவிஞர்கூறும் பிள்ளைகளில் ஒருவராக உங்களைக் கருதிக் கொண்டு கவிஞர் வெளிப்படுத்திய மன உணர்வுகள் பற்றி உங்களது மனக்கருத்தினை கவிஞருக்கு எழுதுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 புள்ளிகள்

**10. தரம் ஒன்பதிற் கற்கும் மாணவரொருவர் தம்முடைய தமிழ்ப்பாட ஆசிரியரின் வழிகாட்டலுக் கிணங்க தம்முடைய வகுப்பாசிரியரைச் செவ்வி காணும் பொருட்டு தயாரித்த வினாக்கள் கீழே தரப்பட்டுகின்றன. உங்கள் வகுப்பாசிரியரிடம் முன்னனுமதி பெற்று இவ்வினாக்களை அவரிடம் கேட்டு அவர் கூறுகின்ற பதிலை எழுதுக.**

i. நீங்கள் மாணவப் பருவத்தில் இருந்த போது எதிர்காலத்தில் என்ன தொழில் செய்யவேண்டுமென விரும்பினீர்கள்?

ii. நீங்கள் எதிர்பார்த்த தொழில் உங்களுக்குக் கிடைத்ததா? இல்லையெனில் ஏன் அது கிடைக்கவில்லை?

iii. தற்பொழுது நீங்கள் செய்கின்ற தொழில் உங்களுக்குத் திருப்தியாகவுள்ளதா?

iv. தற்பொழுது பள்ளி மாணவர்களாக இருக்கும் நாம் எதிர்காலத்தில் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நீங்கள் கூறும் புத்திமதி என்ன?

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த நூற் பரீட்சை - II

**தரம் - 6 பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை பாடநூலில் எந்தப் பாடத்தில் எந்தப் பக்கத்தில் எந்தப் பந்தியில் எந்தெந்த வரிகளில் உள்ளன என்பதைப் பாடநூலை அவதானமாக வாசித்து எழுதுக.**

**01. கடைக்காரர் குடையை உள்ளே வைத்துவிட்டு வந்தார்.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

**02. காலம் கெட்டுப் போய்க் கிடக்கிறது.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

**03. நேற்று அதை என் கூட்டாளிக்குக் காட்டிக் கதைத்துக் கொண்டிருந்தான்.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

**04. சீறத் என்ற அரபுச் சொல்லிலிருந்தே சீறா என்ற சொல் பிறந்தது.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

**05. "எனவே நான் எனது கன்றையும் இனத்தையும் விரைவாகச் சென்று காணலாம்".**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

**06. "கானிடைப் பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற்போக்கின்**

**மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்னருண்டோ?"**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பாடல் :------------------ வரிகள்:------------------------

**07. இப்பூமியில் வாழும் உயிரினங்கள் யாவும் நிச்சயமாக இறப்பதல்லாது நிலையாக இருப்பது உண்டோ?**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

**08. சாவகச்சேரி பதின்மூன்று கட்டை.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

**09. நான் புகைக்கும் வழக்கம் இல்லையென்றதும் அதைத் தம்முடன் வைத்துக் கொண்டார்.**

பாடம் :------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே காவிய பாடசாலைப் பிரவேசம் காத்திருக்கிறது.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

11. சொற்களைப் பிரித்து எழுதுதல் இக்காலத் தமிழின் ஒரு முக்கியமான பண்பு என்று கூடக் கூறலாம்.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

12. தம்பி முத்துப்பிள்ளை சொன்னபடி எல்லாம் செய்திருக்கின்றோம்.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

13. உன்னையே அம்மா என்று ஊமையும் கூற லானாள்.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

14. அன்பாம் அருளே செம்பொருளே! அடரும் பாவச் சிறையிடையே.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

15. அறிவிப்பாளர் இதைச் சொல்லி முடித்ததும் எமது தலைக்கு மேலிருந்த வானைப் போன்று வளைந்த கூரை பிரகாசமாக ஒளிர்ந்தது.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

16. அந்த ஒளிப்புள்ளி மேலே கிளம்பிக் கொண்டிருந்தது.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

17. அறிஞர்கள் எதிர்வு கூறியதைப் போல் ஹேலியின் வால் வெள்ளி பிரகாசமாகத் தெரியவில்லை.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரிகள்:------------------------

18 குனிந்து புழுவைப் பரிவோடு எடுத்து நிழலில் விட்டார்.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

19. அன்பில்லாத மனிதர்களுக்கு அறம் கொடுமையாக, கூற்றாகக்கூட அமைகிறது.

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------

20. வேறு எப்படி அவரை நாம் பாராட்ட முடியும்!

பாடம் :------------------------------------------------------------------------------------------------

பக்கம் :--------------- பந்தி :------------------ வரி :------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கம்பராமாயணம்

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.*
*எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் பாடலைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடல்வரியினைப் பார்த்து இடதுகையால் எழுதுக.**

ஆழநெடுந்திரை ஆறுகடந்திவர் போவாரோ.

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றுக்குக் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. "மறையவர் தொடரப் போனாள் மறையவர் என்றால்

i. அந்தணர் ii. காயப்பட்டவர் iii. முதலாளி iv. ஏழை

ii. குகனது அன்பு மழையால் மூழ்கி இராமபிரான் இன்புற்றார். இந்த வாக்கியத்தின் எழுவாய்

i. மழை ii. குகன் iii. இராமபிராமன் iv. இன்புற்றார்.

iii. சிலைவேடர் தேவரின் வலியார். இத்தொடரில் வந்துள்ள சிலை என்பது.

i. வில் ii. அம்பு iii. உருவம் iv. நூல்

iv. தாமரை நயனத்தான். இத்தொடரிலே வந்துள்ள நயனம் என்பது.

i. காது ii. கண் iii. கால் iv. கை

v. பொற்குடம் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது.

i. பொற் + குடம் ii. பொல் + குடம் iii. பொற்கு + டம் iv. பொன் + குடம்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

i. பிராட்டி என்பதன் எதிர்ப்பாற் சொல் பிரான். [ ]

ii. வனம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் ஆகாயம். [ ]

iii. ஸ்ரீ ராமனது தரிசனம் கிடைத்ததைக் குகன் பெரும் பேறாகக் கருதினான். [ ]

iv. இராமபிரான் குகனது நட்பினை ஏற்றுக் கொள்ளவில்லை. [ ]

v. விழிபுனல் என்றால் கண்ணீர். [ ]

1x5=5 புள்ளிகள்

5. **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| i. உத்தரவு | மரக்கலம் |
| ii. நாவாய் | பெரியோர் |
| iii. புனிதர் | தம்பி |
| iv. இளவல் | சுற்றம் |
| v. கிளை | பணிமொழி |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. இராமபிரான் வேடுவத் தலைவனாகிய குகனை எப்போது முதன் முதலாகச் சந்தித்தார்.

------------------------------------------------------------

ii. இராமபிரானின் தரிசனம் குகனது மனதில் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தியது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iii. தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு கேட்டு குகன் இராமபிரானிடம் கூறியவை எவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iv. துன்பம் உள்ளதெனில் அதனை எவ்வாறு கருதவேண்டும்.

------------------------------------------------------------

v. "சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேன்யான்

வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன்" என்று யார் யாரிடம் எச்சந்தர்ப்பத்திற் கூறினார்.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வரும் பாடலின் பொருளை உரைநடையில் எழுதுக.**

துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேன்
முன்புள மொருநால்வே முடிவுள தெனவுன்னா
வன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானோம்.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

12 புள்ளிகள்

08. **தற்கால மாணவர்களின் எதிர்கால நலனைக் கருதத்திற் கொண்டு மக்கள் வங்கி நடைமுறைப் படுத்தும் "சிசு உதான" சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பதற்கு வேண்டிய விண்ணப்பப்படிவம் கீழே தரப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் பெயரில் சிசு உதான கணக்கொன்றை ஆரம்பிப்பதாகக் கருதிக் கொண்டு தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.**

| | |
|---|---|
| முகாமையாளர் / Manager,<br>மக்கள் வங்கி / People's Bank,<br>.................................... கிளை Branch | **கணக்கு இல**<br>Account No. ....................... ப.இ. F } 538 STE<br><br>..........................................................<br>அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்<br>Authorised Officer's Signature |

***'சிசு உதான' (மாணவர் மலர்ச்சி) சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பம்***

**APPLICATION FOR "SISU UDANA" MINOR'S SAVINGS ACCOUNT**

கீழே பெயர் குறிப்பிடப்படும் பராயமடையாதவர் பெயரில் 'சிசு உதான' (மாணவர் மலர்ச்சி) சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.
Please open a "SISU UDANA" Minor's Savings Account in the name of the undermentioned applicant.

**01.** முழுப் பெயர் / Full Name of the Minor } ........................................................................

**02.** பிறந்த திகதி / Date of Birth } ........................................................................

**03.** முகவரி / Address of applicant (minor) } ........................................................................

**04.** பாடசாலையின் பெயரும் தரமும் / Name of the School and grade } ........................................................................

**05.** முழுப்பெயர் தாய்/தந்தை/பாதுகாவலர் / Name of the applicant's (minor's ) Mother/Father/Guardian } ........................................................................

**06.** முகவரி தாய்/தந்தை/பாதுகாவலர் / Address of applicant's Mother/Father/Guardian } ........................................................................

........................................................................

இக் கணக்கை நடத்திச் செல்வது தொடர்பாக வங்கியினால் வங்கி வளவில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் அனைத்து நியதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க நடப்பதற்கு நான் உடன்படுகின்றேன். I abide by all rules and regulations laid down by your Bank in relation to "SISU UDANA" Minor's Savings Scheme.

தேசிய அடையாள அட்டை இல. / National Identity Card No } ........................................

திகதி / Date } ................................

........................................................
தாய்/தந்தை/பாதுகாவலர்? கணக்கு வைத்திருப்பவர்.
Signature of Mother/Father/Guardian/applicant.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 மேல்வரும் கருத்துப் படத்தினை அவதானித்து அதனைப் பற்றிப் பதினைந்து வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

இயற்கையை நீ அழித்தால்

இயற்கையால் நீ அழிவாய்



15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கம்பராமாயணம் என்ற பாடத்தில் இராமன் குகன் ஆகிய கதை மாந்தர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலை உரைநடையில் எழுதுக.

இராமன் :- ..................................................................................................

குகன் :- ..................................................................................................

இராமன் :- ..................................................................................................

குகன் :- ..................................................................................................

இராமன் :- ..................................................................................................

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிப்பெருங் கருணை

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் உரைப் பகுதியைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"விரிந்த மனப்பாங்கு நேரிய நடத்தை.
உறவினர்க்கு உதவுதல் பழியுணர்ச்சியற்ற செயல்கள்
இவைதான் உயர்வான செல்வங்கள்."

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் வாக்கியத்தினைப் பார்த்து இடதுகையால் எழுதுக.**

உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி.

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பிச்சைக்காரன் ஒருவன் தள்ளாடித் தள்ளாடி வருகிறான். இதில் வந்துள்ள தள்ளாடித் தள்ளாடி என்பது.

i. அடுக்குத்தொடர் ii. அடுக்கிடுக்குத்தொடர் iii. உவமைத்தொடர் iv. உவமைத்தொகை

02. யாரடா நீ? என்பது.

i. வியங்கோள் வாக்கியம் ii. கூற்று வாக்கியம்
iii. வினா வாக்கியம் iv. உணர்ச்சி வாக்கியம்

3. "உன்னால் இந்த இடத்தின் தூய்மையே கெட்டுவிடும்" இதில் வந்துள்ள தூய்மை என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்

i. அசுத்தம் ii. வெண்மை iii. பரிசுத்தம் iv. கறுப்பு

4. அநாதை ஐயா ஆதரவு கொடுங்கள். அநாதை என்றால்

i. பொருளிழந்தவன் ii. இடம்பெயர்ந்தவன்
iii. பணக்காரன் iv. உற்றார் உறவினர்கள் யாருமற்றவன்.

5. ஐயா! மகாராசா! என்னைக் காப்பபாற்றுங்கள். மகாராசா என்பதன் எதிர்ப்பாற்சொல்.

i. இளவரசி ii. பேரரசி iii. பிராட்டி iv. மகாராணி

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. மூவிட வினை முற்றுகள் விகுதியாலேயே எண்ணையும் இடத்தையும் உணர்த்துகின்றன. [ ]
2. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மொழியிலே புதியபுதிய கலைச்சொற்கள் உருவாக்கம் பெறுகின்றன. [ ]
3. விளையாடினேன் என்பது படர்க்கை வினைமுற்று. [ ]
4. "பென்சில்" என்பது தூய தமிழ்ச்சொல். [ ]
5. குடிசை என்றால் பெரிய வீடு என்று பொருள்படும். [ ]

1x5=5 புள்ளிகள்

05. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. கீபோட் | வலைப்பக்கம் |
| 2. சொப்ற்வெயர் | மின் அஞ்சல் |
| 3. பாஸ்வேட் | விசைப்பலகை |
| 4. ஈமெயில் | குறியீடு |
| 5. வெப்சைட் | மென்பொருள் |

1x5=5 புள்ளிகள்

06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பிச்சைக்காரன் உணவு உண்ண முற்பட்டபோது, மதகுரு எதற்காக அவனைத் தடுத்தார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

2. வெளியே ஓடு என்று மதகுரு விரட்டிய போது பிச்சைக்காரன் அவரிடம் என்ன கேட்டான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. கொட்டும் மழைக்கும் குமுறும் இடிக்கும் பயப்படுபவர் யார்?

------------------------------------------------------------

4. "ஐயோ! எங்கோ முழங்குகிற இடி என் தலையிலே விழக்கூடாதா?" என்று கேட்டு அவலப்பட்டது யார்? ஏன் அவ்வாறு கேட்டான்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. "பகைவருக்கும் அருள்கிறேன் நான். பழிவாங்குகிறாய் நீ" என்று யாரால் யாருக்குக் எப்போது கூறப்பட்டது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. தற்போது கணனிப் பாவனையிலுள்ள தமிழ் எழுத்து வடிவங்களின் பெயர்கள் சில அதே எழுத்து வரிவடிவங்களிற் கீழே தரப்படுகின்றன. இவற்றை அகர வரிசையில் ஒழுங்குபடுத்துக.

| | | | |
|---|---|---|---|
| ஆனந்தபைரவி | ------------------------ | உதயம் | ------------------------ |
| பூபாளம் | ------------------------ | பூங்கொடி | ------------------------ |
| கல்யாணி | ------------------------ | அலங்காரம் | ------------------------ |
| அடங்காப்பிடாரி | ------------------------ | சண்முகப்பிரியா | ------------------------ |
| பிச்சைக்காரி | ------------------------ | பைரவி | ------------------------ |
| கார்முகில் | ------------------------ | கிழவி | ------------------------ |
| சிங்காரி | ------------------------ | சிந்துபைரவி | ------------------------ |
| சரஸ்வதி | ------------------------ | கிந்தோளம் | ------------------------ |
| கீதப்பிரியா | ------------------------ | பாமினி | ------------------------ |
| கமலம் | ------------------------ | பவானி | ------------------------ |
| செய்தி | ------------------------ | பிருந்தாவனம் | ------------------------ |

15 புள்ளிகள்

08. யப்பான் நாட்டைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தனது தாய் நாட்டைப் பற்றிச் சொன்னவை கீழே தரப்பட்டுள்ளன.

"இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது எமது நாடு பாரிய அழிவுக்கு உள்ளாக்கப்பட்டது என்பதை அறிந்திருப்பீர்கள். ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எமது நாட்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக எமது நாடு உலகில் மிக உயர்ந்த கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்றாக மதிக்கப்படும் அளவுக்கு உயர்ந்துள்ளது. எமது நாட்டு மக்களின் தேச பக்தி, கருமமாற்றும் மனப்பாங்கு, திறமைகள் என்பன காரணமாகவே இந்நிலைக்கு உயரக் கூடியதாக அமைந்தது".

இவ்வாறு எமது தாய் நாட்டைப்பற்றி எழுதுக.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தரப்பட்டுள்ள உரைப்பகுதியை அவதானமாக வாசித்து பொருத்தமான இடங்களிலே அவற்றுக்குரிய நிறுத்தக் குறியீடுகளை இடுக.

தெளிவற்றவனே என்னை வழிபடவில்லை என்பதற்காகவா மழையிருட்டில் அவனை வெளியே விரட்டினாய் பாவம் கொட்டும் மழையில் அவன் என்ன செய்வான் பிறந்தது முதலாகவே அவன் என்னை வணங்கியதில்லை என் பெயரைக்கூடச் சொன்னதில்லை என்றேனும் மனம் திருந்த மாட்டானா என்று அவன் செய்கிற பெருந் தவறுகளையெல்லாம் பொறுத்து மன்னித்து இன்னமும் அவனுக்கு வாழ்வளித்து வருகின்றேன் நீயோ அவனுடைய இந்தச் சிறிய பிழையை மன்னிப்பதாய் இல்லை.

12 புள்ளிகள்

10. தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு "கட்சின் அம்மையார்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

- 07.03.1899இல் பிரித்தானிய நாட்டில் பிறந்த கட்சின் அம்மையார் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணி பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு 1928ஆம் ஆண்டு ஆசிரியப் பணிக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார்.
- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் உப அதிபராகவும் பணியாற்றினார்.
- உடுவில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் உப அதிபராகப் பணியாற்றினார்.
- தமது ஆசிரியப் பணிக்கு வசதியாக தமிழ்மொழியைக் கற்பதற்காக இந்தியா சென்ற அம்மையார் தமிழை நன்கு கற்று அதில் புலமை பெற்றார்.
- ஆங்கிலமொழி மூலமான அன்றைய கற்பித்தல் திட்டத்தில் ஒரு தமிழ் ஆசிரியராக அவர் பணியாற்றினார்.
- 1955ஆம் ஆண்டு தனது 59ஆவது வயதில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வுபெற்ற அம்மையார் தனது சொந்த நாட்டிற்குத் திரும்பினார்.
- அதே வருடம் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினார். திரும்பிய அம்மையார் தனது முழுவாழ்நாளையும் இங்கே சமூகப் பணியில் செலவிட முடிவெடுத்தார்.
- அதே ஆண்டு கிளிநொச்சியில் கருணா நிலையம் என்ற பெயரில் ஆதரவற்றோர் இல்லமொன்றை தனது சொந்தப் பணத்தில் உருவாக்கினார்.
- வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் உட்பட சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்களின் அவல நிலை அம்மையாரைப் பெரிதும் பாதித்திருந்ததால் தனது கருணா நிலையத்தில் அத்தகைய பெண்களுக்கு முன்னுரிமை வழங்கினார்.
- வசதியும் வாய்ப்பும் மிக்க வளமான குடும்பத்தின் உறுப்பினராக கட்சின் அம்மையார் இருந்தபோதும் இறக்கும் வரை அழகாக அமைக்கப்பட்ட ஓர் ஓலைக் குடிசையிலேயே தனது வாழ் நாளை விரும்பிக் கழித்தார்.
- கருணா நிலையத்தில் பிள்ளைகளின் கைப்பணிப் பொருட்களை தனது சைக்கிளில் ஏற்றி 40 மைல்களுக்கு அப்பால் இருந்த யாழ்ப்பாண நகரத்திற்கு ஓட்டிச்சென்று அவர் விற்ற கதைகளை கருணா நிலையத்தின் மூத்த உறுப்பினர்கள் இன்று கண்ணீருடன் நினைவு கூர்கின்றனர்.
- தனது சாவின் பின்னர் தனக்கு எவ்வித நினைவுச் சின்னங்களும் எழுப்பக் கூடாது என்பது அம்மையாரின் கட்டளையாக இருந்தது.
- இறந்த பின் தனது உடலைத் தகனம் செய்யவேண்டும் என்றும், தகனம் செய்யப்பட்ட சாம்பலை இரணைமடுக் குளத்தின் நீரில் விட்டு 68 வருடங்கள் தான் வாழ்ந்த மண்ணுடன் அதனைக் கரைத்துவிடவேண்டும் என்றும் வேண்டியிருந்தார். கருணா நிலையத்தின் உறுப்பினர்கள் கட்சின் அம்மையாரின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றினார்கள்.
- பிரித்தானியாவில் இருந்த தனது வசதியான வாழ்க்கையைத் துறந்த இந்தப் பட்டதாரி அம்மையார் எமது மண்ணிற்கு வந்து எமது மக்களிற்கு கல்விச் சேவை, சமூக சேவை புரிந்து எமது மக்களுடன் ஒன்றாகக் கலந்து வாழ்ந்த அதேவேளை தனது உடலும் இந்த மண்ணுடன் சங்கமமாகவேண்டும் என்று விரும்பினார்.

---------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயல் - 16**



# பல்சுவைப் பாடல்கள்

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"செவ்வனுற நெஞ்சகத்திற் சிந்தித்த காரியத்தை
எவ்வெவர்க்கும் வாயா லியம்பற்க - இவ்வுலகிற்
பல்லோ ரறியிற் பழுதாம் பயன்படலும்
இல்லையெனச் சொன்னா ரெடுத்து."

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடலைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

"பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி"

------------------------------------------------------------

------------------------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. நகையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவன்
   i. விகடகவி ii. வித்தாரகவி iii. வரகவி iv. மதுரகவி
2. ------------------ உடையார் இகழ்ச்சி அடையார்
   i. முயர்ச்சி ii. முயச்சி iii. முயற்சி iv. முயற்ச்சி
3. ஆண்டான் என்னும் சொல்லின் பகுதியாக வரக்கூடிய சொல் எது?
   i. ஆண் ii. ஆண்ட iii. ஆள் iv. ஆண்டு
4. இனிது இனிது ஏகாந்தம் இனிது.... இதில் வந்துள்ள இனிது இனிது என்பது
   i. அடுக்கிடுக்குத்தொடர் ii. உவமைத்தொடர்
   iii. அடுக்குத்தொடர் iv. வேற்றுமைத்தொகை
5. மாயக்குறத்தி மகன் வழிமறித்துக் கண்ணி வைத்தான் இதில் வந்துள்ள குறத்தி என்பதன் எதிர்ப்பாற் சொல்
   i. வாலிபன் ii. குறவன் iii. வேலன் iv. வீரன்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

i. எல்லோருக்கும் ஒவ்வொன்று மெளிது என்பது கூற்றுவாக்கியம். [ ]

ii. ஆபத்துக்குதவாப்பிள்ளை என்ற பாடலைப் பாடியவர் ஔவையார். [ ]

iii. இசை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் வசை. [ ]

iv. கோபத்தை அடக்கா வேந்தன் பயனில்லாதவன். [ ]

v. அசையாத சமூகத்தில் மூடக்கொள்கை வேரூன்றும். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| குரு | அறிவினர்ச்சேர்தல் |
| இனிது | இரை |
| புல் | காலங்காட்டுதல் |
| குஞ்சு | சீடன் |
| வினைச் சொல் | மிருகத்தீனி |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. நாமே பெரியவர் என்று ஏன் வலிமை சொல்லக்கூடாது?

---

ii. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"

என்ற பழமொழியின் பொருள் தரும் வேறு பழமொழி ஒன்றினை எழுதுக.

---

iii. ஆட்காட்டி தன் குஞ்சுகளுக்கு இரை தேடி எங்கெங்கே சென்று வந்தது?

---

iv. ஆட்காட்டியும் அதன் குஞ்சுகளும் அழுத கண்ணீர் எங்கெல்லாம் ஓடியது?

---

v. கடலோரம் என்பதைப் பிரித்து எழுதுக.

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

i. குருவிக்கூடு :

ii. தேன்சிலம்பி :

iii. கடலோரம் :

iv. குருமொழி :

3x4=12 புள்ளிகள்

**08. ஒருவருடைய நடை, உடை, ஆளுமை பற்றி இன்னொருவர் அவதானித்துச் சொன்னவை கீழே தரப்படுகின்றன. இதை வாசித்தபின் உங்கள் அயலில் வசிக்கும் ஒருவரைப் பற்றி அவருடைய வாழ்க்கைக் கோலங்களை அவதானித்து சிறு குறிப்பு எழுதுக.**

இவன் அதிக உயரமும் அதிக குள்ளமுமில்லாமல் மத்திய தரமான உயரமுள்ளவன். வயது முப்பத்துநான்கு. ஆனாலும் தலைமுடி நரைத்துக்கொண்டு வருகின்றது. நல்ல கட்டுமஸ்தான சரீரம் கங்கேரியப் புரட்சிவாதியான சேமேர் என்பவனை பல வகையிலும் ஒத்திருக்கின்றான். ஆனால் அவனை விட இவன் கொஞ்சம் கறுப்பு. இவன் தலைமுடியும் தாடியும் கறுத்திருக்கின்றன. சிறிது காலமாக இவன் சவரம் செய்து கொள்வதில்லை. இவனுடைய பெரிய தீப்போன்ற கூரிய பார்வையுடைய கண்கள் இவனிடத்தில் ஏதோ ஒரு வித கடூரம் இருப்பதாகப் புலப்படுத்துகின்றன. இவனுடைய அறிவின் மேன்மையானது, இவனுடை சூழ்நிலையில் அதாவது சுற்றியிருப்பவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. பாஞ்சாலி சபதம் என்னும் தன்னுடைய காவியத்திற்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய முன்னுரை கீழே தரப்படுகிறது. அதனை வாசித்து அதன் கீழ்க் காணும் வினாக் களுக்கு விடை தருக.**

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன். நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல்வேண்டும்.

காரியம் மிகப் பெரிது எனது திறமை சிறிது. 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக.

இந்நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந் நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை. தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பாராசக்தியே என்னை இத் தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்கும் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

சுப்பிரமணிய பாரதி,

i. நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் என பாரதியார் யாரைக் குறிப்பிடுகின்றார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

ii. பாரதியார் தன்னுடைய காவியத்திலே திருதராஷ்டிரனை எவ்வாறு சித்திரித்துள்ளார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iii. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் எதனைத்தழுவியது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iv. கவிதைத் தொழிலில் பாரதியாரைத் தூண்டியவர் யார் என அவர் கூறுகின்றார்?.

------------------------------------------------------------

------------------------------------------------------------

v. பாரதியார் தான் எடுத்துக்கொண்ட காரியம் மிகப் பெரிது என எதற்காகக் கூறுகின்றார்?.

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக உங்களுடைய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகளை ஓர் அறிக்கையாக எழுதுக?

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழியும் மொழியும்

இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

**01. மேல்வரும் வெண்பாவைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் எதிர்கொள்ளார் - செவ்வி
அருமையும் நோக்கார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.

3 புள்ளிகள்

**02. மேல்வரும் திருக்குறளைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை".

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. இறைவனுக்கு அடிபணிதல் என்ற கருத்தினைக் குறிக்கும் சொல்
   i. சமயம் ii. தமிழ் iii. இஸ்லாம் iv. இலக்கியம்
2. இஸ்லாம் சமயம் முதன் முதலிற் தோற்றிய நாடு
   i. தமிழ்நாடு ii. அரபு நாடு iii. பலஸ்தீனம் iv. மலேசியா
3. ஓர் இனத்தின் இலட்சியத்தை எடுத்துக் காட்டுவது
   i. இலக்கணம் ii. காவியம் iii. செய்யுள் iv. இலக்கியம்
4. அச்சாணி இல்லாத தேர்.............. ஓடாது
   i. முற்சாண் ii. முட்சாண் iii. முச்சான் iv. முச்சாண்
5. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" இதிலே கேளிர் என்று கூறப்படுபவர்.
   i. பகைவர் ii. நண்பர் iii. அந்நியர் iv. உறவினர்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றுக்கு நேரயுள்ள அடைப்பபுக்குறிக்குள் எழுதுக.**

i. முஸ்லீம்களின் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரபு மொழி இன்றியமையாத தாகின்றது. [ ]

ii. தமிழ் மொழி முஸ்லீம் மக்களின் வீட்டு மொழியாகக் கருதப்படுகின்றது. [ ]

iii. சிறந்த சொற்களைச் சிறந்த ஒழுங்கு முறையில் அமைத்து எழுதுவது வசனம் எனப்படும். [ ]

iv. ஈராயிரம் ஆண்களுக்கு முன் சங்கம் அமைத்து வளர்க்கப்பெற்றது தமிழ்மொழி. [ ]

v. ப், வ் என்பன இறந்தகால இடைநிலைகள் [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்பபடுத்துக.**

| | | |
|---|---|---|
| i. | தனிச்சிறப்பு மிக்கது | தவிர்ப்பது |
| ii. | விலக்கப்பட்டவை | இறந்தகால இடைநிலைகள் |
| iii. | விதிக்கப்பட்டவை | மேற்கொள்வது |
| iv. | கின்று, கிறு | இஸ்லாம் மார்க்கம் |
| v. | த், ட், ற், இன் | நிகழ்கால இடைநிலைகள் |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. இஸ்லாம் மார்க்கத்தின் விழுமிய கருத்து யாது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

ii. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களின் சிறப்பு என்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iii. இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தாரக மந்திரம் என்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iv. முஸ்லிம்களின் வழிபாட்டு மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியாதது ஏன்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

v. இலக்கியத்தின் இரு பிரிவுகளும் எவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **தரப்பட்டுள்ள உரைப்பகுதியைக் கவனமாக வாசித்து அதன் கீழே காணப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

கல்வி ஒழுங்கமைப்பின் வாயிலாக மேம்பாடான நிலையை அடைவோர் ஆசிரியர்களாக வரும் மரபு ஐரோப்பியர ஆட்சிக்காலத்தில் நிலைகுலையத் தொடங்கியது. ஆங்கில மொழியைச் சிறிதளவு அறிந்திருந்தோரும் ஆசிரியராக வரக்கூடிய வாய்ப்பு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது. ஆங்கில மொழியின் மேலாதிக்கம் காரணமாக தேசிய மொழிகளைக் கற்பதும் தேசிய மொழிகளில் ஆசிரியர் கல்வி பெறுதலும் தாழ்வானவையாகக் கருதப்பட்டன. 1869ஆம் ஆண்டில் பொதுப் போதனைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பாடசாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்க, ஆசிரியர் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க முடியாமலிருந்தமையால் மாணவர் தலைவர்களை ஆசிரியர்களாக்கும் முயற்சிக்கு உற்சாகமளிக்கப்பட்டது. இம்முறை "சட்டாம்பிள்ளை" முறையென்றும் கூறப்பட்டது. குறைந்த செலவில் ஆசிரியர் தேவையை நிறைவேற்றக்கூடிய உபாயமாக இது விளங்கியது. ஆனால் தரமான கல்வியை வழங்க இம்முறையானது அனுகூலமாக இருக்கவில்லை. 1929ஆம் ஆண்டளவில் இது இலங்கையிலேயே கைவிடப்பட்டது.

இலங்கையில் ஆசிரியர் சம்பளம் ஏனைய துறைகளோடு ஒப்பிடும் பொழுது மிகக்குறைவாகவே காணப்பெற்றது. 1923ஆம் ஆண்டில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் இதனைச் சட்டசபையிலே சுட்டிக்காட்டி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் முயற்சிக்குத் தூண்டுதல் தந்ததன் விளைவாக 1925 ஒக்டோபர் மாதம் புதிய சம்பளத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1827ஆம் ஆண்டில் ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

1943ஆம் ஆண்டில் கல்வி பற்றிய சிறப்புக் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் ஆசிரியர் பயிற்சியில் மேலும் ஊக்கம் காட்டினர். ஆசிரியர் கல்வியை மேம்படுத்துவதன் வாயிலாகவே நாட்டின் கல்வித் தரம் மேம்பட முடியும் என்பதில் நம்பிக்கையூட்டினர். தேசிய மொழி ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்படவேண்டும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

i. 1943ஆம் ஆண்டு கல்வி பற்றிய சிறப்புக் குழுவினர் எதன் வாயிலாகக் கல்வித் தரம் மேம்பட முடியும் என நம்பிக்கையூட்டினர்?.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

ii. ஆங்கில மொழியின் மேலாதிக்கம் காரணமாகத் தாழ்வானவையாகக் கருதப்பட்டவை எவை?

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

iii. சட்டாம்பிள்ளை முறை என்றால் என்ன?

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

iv. 1923 ஆம் ஆண்டில் சேர் பொன். இராமநாதன் அவர்கள் உரிய நடவடிக்கைக்காகச் சட்ட சபையிலே சுட்டிக்காட்டிய விடயம் என்ன?

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

v. ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளச் சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது?

------------------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

[தொழுகை, சகோதரத்துவ, பண்டைய, இலங்கையிலும், அனைவரும், நிறைவேற்றுவது, புறத்திணையையும், வழிகாட்டியாக, பண்டைய, இன்றைய, நாடுகளில், இஸ்லாம்.]

i. உலக முஸ்லீம் மக்கள் ------------------------------முஸ்லீம் என்னும் ---------------------------- இணக்கம் கண்டுள்ளனர்.

ii. அகவாழ்வினையும் புறவாழ்வினையும் விதந்து கூறும் அகத்திணையையும் ---------------------- சிறப்பம்சங்களாகக் கொண்டது ------------------------------------ தமிழ்மொழி.

iii. தமிழ் நாட்டிலும் ------------------------------ வாழும் முஸ்லீம்களுக்கு------------------------------ அமைவது இஸ்லாம்.

iv. சில மொழிகளில்------------------------------ இலக்கியத்தை அம்மொழிகளைப் பேசும் ------------------------------------ மக்கள் விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதைக் காண்கின்றோம்.

v. அரபு மொழிப் பயிற்சி இன்றி ------------------------------ முதலிய வழிபாட்டு முறைகளை ---------------------------------------------- முஸ்லீம்களுக்குக் கடினமாகிறது.

vi. அரபு நாட்டில் முதன் முதல் தோன்றிய ------------------------------ காலப்போக்கில் பல்வேறு ---------------------------------------------- பரவியது.

2x6=12 புள்ளிகள்

09. **தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களை விளங்கிக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| தொடர்கள் | உவமானம் | உவமேயம் | உவமை உருபு | பொதுத் தன்மை |
|---|---|---|---|---|
| அன்னம் போலும் தூய்மை | | | | |
| புலியை ஒத்த வீரம் | | | | |
| கார் போலும் கூந்தல் | | | | |
| காந்தள் போன்ற விரல்கள் | | | | |
| மதி அன்ன முகம் | | | | |
| பிறை போன்ற நெற்றி | | | | |
| வேல் போன்ற விழிகள் | | | | |
| முத்துப் போன்ற வியர்வைத் துளிகள் | | | | |
| குயில் அனைய மொழி | | | | |
| மயில் போலும் நடை | | | | |

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு பேராசிரியர் எம். எம். உவைஸ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

- பேராசிரியர் கலாநிதி அல்லாமா ம. முகம்மது உவைஸ் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சிறப்பான இடத்தைப் பெறுகின்றார்.
- 1949இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றார்.
- ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.
- 1959இல் தற்போதுள்ள ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து அப்பல்கலைக் கழகத்திலே நவீன கீழைத்தேய மொழித்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.
- 1979இல் கலாநிதி ம. மு. உவைஸ் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேராசிரியராகப் பதவி ஏற்றார்.
- 'தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லீம்களின் பங்களிப்பு' என்னும் ஆய்வேட்டினை 1953இல்நூலுருப் பெறச் செய்தார்.
- 'தமிழ் இலக்கியத்தில் முஸ்லீம் காப்பியங்கள்' என்னும் ஆய்வேட்டினை ஆங்கிலமொழியில் எழுதினார்.
- தமிழ் இலக்கிய அரபுச் சொல் அகராதியினை மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டார்.
- இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆறு தொகுதிகளாக் வெளிவரச் செய்தார்.
- இவரது 'இஸ்லாம் வளர்த்த தமிழ்' என்னும் நூல் உலகத்தமிழ் ஆய்வு நிறுவனத்தால் 1948இல் வெளியிடப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்குபற்றி 'மதுரைக் கலம்பகமும் மக்காக் கலம்பகமும்' என்ற ஆய்வுக் கட்டுரையையும் 'தனிச்சிறப்பு மிக்க சீறாப்புராணம்' என்னும் ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்தார்.
- இஸ்லாமிய தமிழாராய்ச்சி மா்நாடுகளிலும் பங்குபற்றி பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார்.
- தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலே பாண்டித்தியம் உடையவராக இருந்ததனால் தமிழில் வெளிவந்த பல நூல்களைச் சிங்கள மொழியிலே மொழிபெயர்த்தார்.
- 'தித்திக்கும் திருமறை', 'நபிகள் நாயகம்' போன்ற நூல்களைத் தமிழில் இருந்து சிங்களத்திற்கும், சிங்களத்தில் இருந்து தமிழிற்கும் மொழிபெயர்த்தார்.
- மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய 'கம்பெரலியா' என்ற நாவலை 'கிராமப்பிறழ்வு' எனத் தமிழில் மொழிபெயர்த்தார்.
- முஸ்லிம் மக்களது பேச்சுத் தமிழ் பற்றிச் சிறந்த ஆய்வினை மேற்கொண்டார்.
- யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 4ஆவது தமிழாராய்ச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட மலரிலே 'ஆங்கிலத்திலே முஸ்லிம்களுடைய பேச்சுவழக்குகள்' பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார்.
- 1952 தொடக்கம் இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றித் தாம் தெரிந்து கொண்டவற்றையெல்லாம் தினகரன் வாரமஞ்சரியில் எழுதிவந்தார். பின்னாளில் இக்கட்டுரைகள் அனைத்தும் 'இஸ்லாமும் இன்பத் தமிழும்' என்னும் நூலாக வெளிவந்தது.
- 1953இல் இலங்கை வானொலி முஸ்லீம் சேவையில் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பாளராக விளங்கியுள்ளார். இதன் காரணமாக இஸ்லாமிய தொடர் நிகழ்ச்சிகளை நடத்தினார்.
- இத்தகைய சிறப்புக்கள் மிக்க பேராசிரியர் **ம. மு. உவைஸ்** அவர்கள் தமிழிற்கும், இஸ்லாமியத் தமிழிலக்கியத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை மனதார நினைந்து தமிழ்மொழியினை ஆக்கத்திறன் கொண்ட மொழியாக மாற்றுவோமாக.

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள்

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன.*
*எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் வெண்பாவினைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒன்றியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

---

---

---

---

3 புள்ளிகள்

**02. மேல்வரும் திருக்குறளைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

---

---

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. "இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பந்தரும்" இதில் வந்துள்ள இம்மை என்பதன் பொருள்.
   i. இப்பிறப்பு ii. மறுபிறப்பு iii. நன்மை iv. தீமை
2 "இன்சொல் இனிது ஈன்றல்...." இதில் வந்துள்ள இன்சொல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   i. பெயர்ச்சொல் ii. இயற்சொல் iii. திரிசொல் iv. வன்சொல்
3. சொல்லின் இயக்கத்திற்கு ஆதாரமாக அமையும் ஒலிகள் ........................................... எனப்படும். இங்கே இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொல் பின்வருவனவற்றில்
   i. உயிரெழுத்து ii. மெய்யெழுத்து iii. மெய்யொலிகள் iv. உயிரொலிகள்
4. தென்னையின் இளையது பிள்ளை போல, பசுவின் இளையது.
   i. கன்று ii. குட்டி iii. நாகு iv. நாம்பன்
5. வலவன் எனக் குறிப்பிடப்படுபவன்
   i. மாலுமி ii. விமானி iii. சாரதி iv. பாகன்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

i. திருக்குறளில் எல்லாமாக 1330 குறட்பாக்கள் உள்ளன. [ ]

ii. இனிய சொற்களைச் சொல்லுதலே இனியவை கூறல் எனப்படும். [ ]

iii. மற்றவரிடம் ஏதாவதொன்றைக் கையேற்பது ஈதல் எனப்படும். [ ]

iv. உயிர் ஒலிகள் மெய் ஒலிகளுடன் சேர்ந்து வருவது நமது மொழி மரபாகும். [ ]

v. அ, இ, உ என்பன வினாவெழுத்துக்களாகும். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| i. உயிர்மெய்யெழுத்து | நெடில் |
| ii. ஆய்தவெழுத்து | அவள் |
| iii. அகச்சுட்டு | தூ |
| iv. புறச்சுட்டு | ஃ |
| v. நெட்டெழுத்து | அந்த வீடு |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. நாம் ஏன் இனிய சொற்களைப் பேசவேண்டும்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

ii. இப்பிறப்பிலும் மறுமையிலும் இன்பந்தர வல்லது எது?

------------------------------------------------------------

iii. இனவெழுத்துக்கள் தமக்கிடையே எத்தகைய உறவுகளைக் கொண்டுள்ளன?.

------------------------------------------------------------

------------------------------------------------------------

iv. மெய்யொலி என்பதைப் பிரித்து எழுதுக?

------------------------------------------------------------

v. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் ஆங்கில வருடத்துடன் முப்பத்தொன்றைக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டாகும். இதன்படி இன்றைய திருவள்ளுவர் ஆண்டினைக் கணித்து எழுதுக.

------------------------------------------------------------

4x5=20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்காணும் வினாக்களுக்கு விடைதருக.**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்தில் எழுந்த இலக்கியமே திருக்குறளாகும். இத்திருக்குறளானது மக்கள் வாழ்வில் கடைப்பிக்க வேண்டிய, மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத ஒவ்வொரு மனிதனும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியதான கருத்துக்களைக் கூறியிருப்பதனால் எல்லா மக்களுமே இத்திருச் குறளை விரும்பிப் படிக்கின்றார்கள்.

**திருக்குறள், அறத்துப்பால் -38 அதிகாரம்,**

**பொருட்பால் -70 அதிகாரம்,**

**காமத்துப்பால் -25 அதிகாரம்** எனும் முப்பெரும் பிரிவுகளை உடையது. அறத்துப்பாலானது பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் எனும் பகுதிகளை உடையதாகும். பொருட்பாலானது அரசியல், அங்கவியல், ஒழிபியல் எனும் பகுதிகளை உடையதாகும். காமத்துப் பாலானது களவியல், கற்பியல் எனும் பகுதிகளையுடையதாகும்.

பாரதி வள்ளுவரைப்பற்றி "யாமறிந்த புலவர்களுள் கம்பனைப் போல் வள்ளுவனைப் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்காணுமே பிறந்ததில்லை" எனவும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு எனவும் புகழந்திருப்பதனைக் காணலாம். இவை மட்டுமல்லாது "அணுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" என ஔவையாரும் "கடுகைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" என இடைக்காடரும் "முப்பால் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார் எப்பாவலரிலும் இலர்" என நல்லந்துவனரும் கூறியிருப்பதனைக் காணலாம். வள்ளுவரினதும் குறளினதும் சிறப்புக்கருதியே இவ்விரண்டிற்கும் அடையாகத் திரு என்பது சேர்க்கப்படுகின்றது. திருக்குறள் பொய்யாமொழி, முப்பால்நூல், வாயுறை வள்ளுவம், திருவள்ளுவம் என மறுபெயர்கள் பெறுவதனையும் காணலாம். இவற்றோடு அறநூல், வாழ்க்கை நூல், உலகப்பொது மறைநூல் என்பன திருக்குறளுக்குரிய பெயர்களில் சிலவாகும். இவ்வாறே வள்ளுவரும் தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர், செந்நாப்போதகர் முதற்பாவலர் பெருநாவலர் எனப் பல பெயர் கொண்டு விளங்குவதனைக் காணலாம்.

i. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளும் எவை?

------------------------------------------------------------

ii. வள்ளுவரின் வேறு பெயர்களைத் தருக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

iii. ஔவையார் திருக்குறளை எவ்வாறு புகழ்ந்து கூறியுள்ளார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

iv. பாரதியார் வள்ளுவரை எவ்வாறு புகழ்ந்திருக்கின்றார்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

v. "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" என்று கூறியவர் யார்?

------------------------------------------------------------

3x5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மேல்வரும் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

i. இன்சொல் :------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

ii. முகம்மலர்ந்து:------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

iii. செம்பொருள் :------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

iv. நல்குரவு :------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

4x3=12 புள்ளிகள்

**09. பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்பது பழமொழி. கீழ்க்காணும் வெண்பாவில்அந்தப் பத்தும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தனித்தனியாக எழுதுக.**

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்.

(1) ------------------------------ (6) ------------------------------

(2) ------------------------------ (7) ------------------------------

(3) ------------------------------ (8) ------------------------------

(4) ------------------------------ (9) ------------------------------

(5) ------------------------------ (10)------------------------------

10 புள்ளிகள்

**10. கீழ்வரும் சொற்கூட்டத்தில் ஒரு வெண்பா உள்ளது. சொற்களை ஒழுங்குபடுத்தி வெண்பாவை ஆக்குங்கள்.**

இவர், நச்சர், பரிதி வள்ளுவர் நூற்கு தருமர்
பரிமேலழகர் எல்லையுரை, திருமலையர்
மணக்குடவர் காலிங்கர் தர்மத்தர் மல்லர்
பரிப்பெருமாள் செய்தார்.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேமநிதி

*இச் செயலட்டையில் எல்லாமாகப் பத்து வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.*

**01. மேல்வரும் வெண்பாவினைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"தருமர் மணக்குடவர் தர்மத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்".

---------------------------------------------
---------------------------------------------
---------------------------------------------
---------------------------------------------

3 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக.**

"அருள்பார் அருள்பார்
அருள் தெரியும்"

---------------------------------------------
---------------------------------------------

5 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. மனிதனுக்கு வரவரச் சுமை அதிகரிக்கின்றது. இந்த வாக்கியத்தின் எழுவாய்.
   i. மனிதன் ii. சுமை iii. அதிகரிக்கின்றது iv. வரவர
2. இந்தப் பிறப்பிலே நாம் மிடுக்காயிருக்கும் போது பொருள்......................பற்றிநாம் சிந்திப்பதில்லை.
   i. வாங்குவதைப் ii. விற்பதைப் iii. சேமிப்பதைப் iv. அழிவதைப்
3. பிற்காலத்தில் தேவைப்படும் என்பதால் பொருளை
   i. சேமித்து வைத்தல்வேண்டும். ii. உபாயம் செய்து வைத்தல்வேண்டும்.
   iii. பதுக்கி வைத்தல்வேண்டும். iv. புதைத்து வைத்தல்வேண்டும்.
4. "ஆகாறு அளவிட்டிதாயினும்..............." இங்கே ஆகாறு என்பது.
   i. பொருள் வரும் வழி ii. பொருள் சொல்லும் வழி iv. நடைபாதை v. நீர்த்தொட்டி.
5. குழாய்வாய் என்பதில் வந்துள்ள புணர்ச்சி.
   i. தோன்றல் ii. திரிதல் iii. கெடுதல் iv. இயல்பு

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. **மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. இடையினத்திற்கு இனவெழுத்துக்கள் இல்லை. [ ]
2. க், ச், ட், த், ப், ற் என்பன இடையினமாகும். [ ]
3. "பொருள்போகிற வழி வருகிற வழியிலும் சிறிதாக இருக்கவேண்டும்" என்பது திருவள்ளுவர் கூறுகின்ற புத்திமதி ஆகும். [ ]
4. மனிதன் ஏனைய பிராணிகளிடம் படிக்கவேண்டிய பாடம் எதுவுமில்லை. [ ]
5. செல்வம் ஓரிடத்திலே நிலையாகத் தங்கும் இயல்பினையுடையது. [ ]

1x5=5 புள்ளிகள்

05. **தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 1. பின்னுக்கு உதவுவது | வழி |
| 2. மறுமைக்கு உதவுவது | எ, யா, ஆ, ஓ, ஏ |
| 3. ஆறு | சேமம் |
| 4. வினாவெழுத்துக்கள் | அ, இ, உ |
| 5. சுட்டெழுத்துக்கள் | உபாயம் |

1x5=5 புள்ளிகள்

06. **மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

i. எங்கே நின்று எந்தப் பிறப்பிலே நின்று கைநீட்டினாலும் அங்கே வந்து உதவுவது எது?

---------------------------------------------------------------

ii. பணமில்லாதவனின் உறவினர்கள் எப்படிப்பட்டவர்கள்?

---------------------------------------------------------------

iii. பணக்காரன் இருமினால் பக்கத்திலே நிற்பவர்களுக்கு ஏன் கண்ணீர் வரும்?.

---------------------------------------------------------------

iv. சேமநிதி என்ற கட்டுரையாசிரியர் நமது நாட்டு வழக்கம் என்று குறிப்பிடுவது எதனை?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

v. பொருளைச் சேகரித்துச் சேமித்து வைப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

vi. உங்களுக்குத் தெரிந்த திருமந்திரப் பாடல் வரி ஒன்றை எழுதுக.

---------------------------------------------------------------

3x6=18 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

[செவிமடுக்காது விட்டால், இல்லையேயானால், பசிப்பிணியைத், ஐந்தரைச், சேமிப்பதைப், தேடாள், உச்சரிக்கின்றது, ஒன்றுமில்லாது, அடுக்களையில், ஆறுசதம், மிடுக்காயிருக்கும், பழகாதுவிட்டால்.]

i. உழைப்பு .......................................... செலவு .............................................. சதமாய் இருக்க வேண்டும்.

ii. பிடியரிசிக்குட்டான் ................................ தொங்கியிருந்து கொண்டு இந்த மந்திரங்களைத் தானே ..........................................

iii. இந்தப் பிறப்பிலே ...................................................... போது பொருள் .............................................. பற்றி நாம் சிந்திப்பதில்லை.

iv. ........................................... வறியவர்களின் அறிவை அழிக்கின்ற ....................................... தீர்க்குக.

v. பொருள் ............................................... இல்லாளுந் ..............................................

vi. சரியாக உச்சரிக்கப் ............................................................... அல்லது சரியான உச்சரிப்பைச் ........................................................................ மாணவர்கள் சரியாக எழுதமாட்டார்கள்.

12 புள்ளிகள்

08. **கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்கு முறைப்படி எழுதினால் கருத்துள்ள ஒரு பந்தியாக அமையும். அவற்றை ஒழுங்குபடுத்திப் பந்தியை எழுதுக.**

1. இவர் தீட்டிய ஓவியங்கள் இன்றும் இல்லங்களை அழகு செய்கின்றன.
2. இரவிவர்மா நுட்பமாகத் தீட்டிய ஓவியங்களால் புகழ் பெற்றார்.
3. மலையாள நாட்டினராகிய இராஜா இரவிவர்மா உலகப்புகழ் பெற்ற ஓவியர்.
4. இவர் போன்ற ஓவியர்கள் பலர் உளர்.
5. ஓவியர் மணி என்று இவரைப் பாரதியார் பாராட்டிப் பாடல் பாடியுள்ளார்.

------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------

12 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியார் சொக்கன் பல்லாண்டு வாழ்க.

எழுத்துலகில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் - காலத்துக்கேற்ற புதுமையும், பொலிவும் குன்றாமல் ஓயாது எழுதிக்கொண்டிருக்கும் மூதறிஞர். கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) இன்று தனது எழுபத்தைந்தாவது அகவையில் கால் எடுத்து வைக்கின்றார்.

சொக்கன் அவர்களது வரலாறு ஈழத்துப் பண்பாட்டின் இலக்கியத்தின் வரலாற்றில் ஓர் தனி இடம் பிடித்துள்ளது. சொக்கன் அவர்கள் ஈழ கேசரிக் காலத்தில் எழுதத் தொடங்கினார். மறுமலர்ச்சிக் காலத்திலும் தொடர்ந்தார். முற்போக்கு இலக்கிய கால கட்டத்தில் அவரது எழுத்துக்கள் முனைப்புப் பெற்றன. இன எழுச்சிக் காலகட்டத்திலும் அவர்கள் காலத்தின் கண்ணாடியாக எழுதுகிறார்கள்.

சொக்கன் அவர்கள் கருவிலே திருவுடையவர். கருவிலே வாய்த்த திருவை வளர்த்துக் கொள்ளத்தமக்குக் கிடைத்த வாய்ப்பையெல்லாம் அவர் சமூக நலன் நோக்கில் ஏற்றுப் பணியாற்றினார்.

சொக்கன் அவர்கள் மதிப்பீடுகளையும் விமர்சனங்களையும் எப்போதும் மகிழ்ச்சியோடு வரவேற்கும் பண்புடையவர். அதே நேரத்தில் தமக்குத் தப்பென்று படும் கருத்துக்களைப் பண்போடு மறுத்துத் தாம் சரியென்று நினைப்பதைச் சான்றுகளோடு நிலைநாட்டும் விமர்சகருமாவார்.

இலட்சிய மூச்சுடன் இலக்கியம் படைக்கும் சொக்கன் சமுதாயத்தை அவர் படம் பிடித்ததுபோல மிகநுட்பமாகத் தமது கதைகளிலே பிரதிபலிக்கச் செய்திருக்கிறார். அவருடைய பேனாவிலே ஒரு ஜீவ ஊற்று உண்டு.

ஈழத்துத் தமிழ் உலகின் சமகாலத் தமிழ் அறிஞர் மரபு வரம்பின் உறுதிமிகு அணையாகத் திகழ்பவர் - கிணற்றினுள் படியும் ஊற்றாகவன்றி பொங்கிப் பிரவாகம் செய்யும் தமிழ்க் கங்கையாகவும், குறுமுனியாகவும் திகழும் சொக்கனுக்கு வயது எழுபத்தைந்தாகக் கண்டிருக்கிறது. ஆம் அது அவரின் அறிவின் முதுமை.

நன்றி நமது ஈழநாடு

நயினை-
கிருபானந்தா

**09. மேலே தரப்பட்டது நமது சமகாலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழறிஞர் ஒருவரைப்பற்றி அவரது மாணவரொருவர் பத்திரிகையில் எழுதிய குறிப்பாகும். இவ்வாறு உங்களுக்குப் பிடித்த ஆசிரியரைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. தரம் ஒன்பதிற் கற்கும் மாணவரொருவர் தனது வகுப்புச் சுவர்ப்பத்திரிகையில் ஒட்டுவதற்குப் பொருத்தமான விடயம் ஒன்று தருமாறு தனது மாமனாரைக் கேட்டபோது, மாமனார் கொடுத்த விடயம் கீழே தரப்படுகின்றது. இதே போன்று உங்களது மாமனாரிடம் நீங்கள் கேட்டுப் பெற்ற விடயமொன்றை உங்களது சுவர்ப்பததிரிகையில் ஒட்டுக.**

## எதைப் புகட்ட வேண்டும்? எதைக் கற்க வேண்டும்?

"அனைத்து மக்களும் நீதி, உண்மை சார்ந்தவர்கள் அல்ல என்று கற்கவேண்டும். ஆனால் பயந்த சுபாவமுள்ள அனைவருக்குள்ளும் வீரன் ஒருவன் உள்ளான் என்று கற்றுக்கொடுங்கள். அனைத்து சுயநலவாதி அரசியல்வாதிக்குள்ளும் தலைமைத்துவம் மிக்க தலைவர் உள்ளார் என்றும் ஒவ்வொரு எதிரிக்குள்ளும் தோழமை உணர்வு உள்ளதென்றும் கற்பியுங்கள்.

அதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். ஆயினும் உழைப்பின்றிக் கிடைக்கும் ஐந்து டொலர்களை விட, தம் உழைப்பின் வியர்வையில் கிடைக்கும் ஒரு டொலர் பெறுமதியானது எனவும் புகட்டுங்கள். வெற்றி மகிழ்ச்சி மிகுந்தது என்பதைக் கூறுவதோடு, தோல்வியை எவ்வாறு அனுபவிப்பது என்றும் கற்றுக்கொடுங்கள். பொறாமை யினின்று அவனை விடுவியுங்கள்.

முடிந்தால் அமைதியாகச் சிரிப்பது எவ்வாறு என்றும் சொல்லிக்கொடுங்கள். புத்தகங்களின் பெறுமதி எத்தகையது என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். இவை எல்லாம் போதிக்கும் அதே நேரம், ஆகாயத்தில் பறந்து திரியும் குருவிகள், சூரிய ஒளியில் தேனைத் தேடும் வண்டுகள், மலைகளில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஆகியவற்றின் நீண்ட கால நிலையான உண்மையின் இரகசியத்தை சிந்திக்கக் கற்றுக்கொடுங்கள்.

குறுக்கு வழியிலும் பார்க்கப் பரீட்சையில் தோல்வி அடைவது சிறந்தது என்றும் கற்றுக்கொடுங்கள். எல்லோரும் பிழை என்று கூறினாலும், தமது கருத்தில், சிந்தனையில் நம்பிக்கை வைக்கும்படி தூண்டுங்கள். அன்புள்ளம் கொண்டவர்களோடு அன்போடும், கடின உள்ளம் கொண்டோரிடத்தில் கடினமாகவும் நடந்துகொள்வது எவ்வாறு என்றும் அவன் கற்றுக் கொள்ளவேண்டும்.

அனைவரும் செய்வதைப் போன்று செய்யாமல், அனைவருக்கும் செவிமடுப்பது எவ்வாறு என்றும் மகனுக்குச் சொல்லிக்கொடுங்கள். ஆனாலும் தான் கேட்பவற்றில் உண்மையானதை மட்டும் ஏற்றுக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள். அவ்வாறே துன்பம் ஏற்படும்போது சிரிப்பது எவ்வாறு என்று கற்பியுங்கள். அழுவது கண்ணீர் விடுவது வெட்கத்திற்குரிய ஒன்றல்ல என்றும் புகட்டுங்கள்.

எச்சந்தர்ப்பத்திலும் பணத்திற்காக உள்ளத்தையும், ஆன்மாவையும் விற்கவேண்டாம் என கட்டாயமாக சொல்லிக்கொடுங்கள். பாய்ந்து வரும் மக்கள் கூட்டத்தைக் கண்டு பயந்து விடாமல், நேருக்கு நேர் நின்று சண்டை பிடிப்பது எவ்வாறு என்று சொல்லிக்கொடுங்கள்.

அவனைக் கருணையோடும், அன்போடும் கவனித்துக்கொள்ளுங்கள். ஆனாலும் செல்லப் பிள்ளையாக்காதீர்கள். ஏனெனில் சுடச் சுடத்தான் பொன் மிளிரும். வாழ்வை எதிர்நோக்க அவனுக்குத் தைரியம் உண்டாகட்டும், கோழையாக இல்லாமல் இருக்க பொறுமையைப் பழக்கப்படுத்திக் கொள்ளுவதையும் உணர்வில் ஊட்டுங்கள்.

தன்னைப் பற்றிப் பாரிய நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்கிறபோது, மனித இனத்தைப் பற்றியும் அவன் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்வான். இது பெரியதோர் பொறுப்பாகும். ஆயினும் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். அவன் இன்னும் சிறிய செல்லப்பிள்ளையாக இருக்கின்றான்."

☞ **ஆபிரகாம் லிங்கன் தன்னுடைய மகனின் பாடசாலை அதிபருக்கு எழுதிய கடிதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த நூற் பரீட்சை - III

**தரம் - 9 பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை பாடநூலில் எந்தப் பாடத்தில் எந்தப் பக்கத்தில் எந்தப் பந்தியில் எந்தெந்த வரிகளில் உள்ளன என்பதைப் பாடநூலை அவதானமாக வாசித்து எழுதுக.**

**01. இராமபிரான் கங்கா நதியைக் கடந்து அதன் தென்கரையை அடைவதற்காக நாவாய் கொண்டு வரும்படி குகனைப் பணித்தார்.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரிகள் :--------------------

**02. காவியின் மலர் காயாக் கடன்மழை யனையரனைத் தேவியொ டடிதாழாச் சிந்தனையுரை செய்வான்.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பாடல்:-------------------- வரிகள் :--------------------

**03. புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற் றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான்**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பாடல் :-------------------- வரிகள் :--------------------

**04. சிந்தனையுணர்கிற்பான் சென்றனன் விரைவோடுந் தந்தன நெடுநாவாய் தாமரை நயனத்தான்.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பாடல் :-------------------- வரிகள் :--------------------

**05. இரக்கம் என்ற குணத்தையே இழந்துவிட்ட அரக்கர்களிடையே அல்லலுற்று வாழ்வதை விட இறப்புலகில் இன்பம் காண்பேன்.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரிகள் :--------------------

**06. உதட்டிலே ஒன்றும் உள்ளத்தில் வேறுமாக இருப்பதுதான் உலகத்தியற்கையாகிவிட்டது.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரிகள் :--------------------

**07. மற்றவர்களிடத்தில் இரக்கப்பண்பு மறந்துவிட்டது என்று எப்படிக் கண்டீர்கள்?**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரிகள் :--------------------

**08. பகைவருக்கும் அருள்கிறேன் நான் பழிவாங்குகிறாய் நீ. பிழைபொறுக்கும் சால்பு உன்னிடத்தில்லை.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரிகள் :--------------------

**09. தங்கள் கருணையே கருணை.**

பாடம் :------------------------------------------------------------

பக்கம் :-------------------- பந்தி :-------------------- வரி :--------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பாடல் :---------------------------- வரி :------------------------------

11. பிற்பாதி போய் விட்டால் ஏவற் சொல்லாம்.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பாடல் :---------------------------- வரி :------------------------------

12. அரபு நாட்டில் முதன் முதலில் தோன்றிய இஸ்லாம் காலப்போக்கில் பல்வேறு நாடுகளில் பரவலாயது.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

13. இஸ்லாம் தோன்றிய மொழியான அரபு மொழியே முஸ்லீம் உலக மார்க்க மொழியாக வழிமொழியாக வாழ்க்கை நெறி மொழியாக மலர்ந்துள்ளது.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

14. அன்றைய மொழியும் இன்றைய மொழியும் இரு வெவ்வேறு மொழிகளாக உருவாகி உள்ளமையே அத்தகைய நிலைக்குரிய காரணமாகும்.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

15. பண்டைய தமிழின் மொழிநடையை இன்றைய தமிழின் மொழிநடையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய முறையில் அமைந்திருக்கும் சிறப்பைப் பெற்றது தமிழ்மொழி.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

16. நல்மனத்துடன் இனிய சொற்களைச் சொல்லுதலே தருமமாகும்.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரி :------------------------------

17. எல்லோரிடத்திலும் இன்பத்தையே விளைவிக்கும் இன்சொல் பேசுவோர்க்கு எத்துன்பமும் இல்லை.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

18. பணம் இல்லையேல் உயிர் போகமுந்தியே ஆள்பிணம் என்பது நமது நாட்டில் பழுத்துக் கனிந்த பழமொழி.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

19. அரைச்சதம் சேமிப்பு நிதியில் சேரட்டும்.

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் :------------------------ பந்தி :---------------------------- வரிகள் :------------------------------

20. "யாவர்க்கு மாம்உண்ணும் போது ஒரு கைப்பிடி"

பாடம் :-----------------------------------------------------------------------

பக்கம் ------------------------ பந்தி :---------------------------- வரி :------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சுயமதிப்பீடு

01. நான் உள்ளத்தால் உணர்வால் நலமாக இருக்கின்றேன். (ஆம் / இல்லை)
02. நான் நேர்மையானவரும் நம்பிக்கைக்கு உரியவரும் ஆவேன். (ஆம் / இல்லை)
03. எனது நேர்மைத் தன்மையை மேலும் வளர்த்துக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
04. நான் தெரிவு செய்பவைகளுக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (ஆம் / இல்லை)
05. எனது தெரிவுகளுக்குப் பொறுப்பேற்பது பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
06. நான் மற்றவர்களைச் சரியாகப் புரிந்து கொள்கிறேன். (ஆம் / இல்லை)
07. நான் மற்றவர்களைப் புரிந்து கொள்வது பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
08. நான் மற்றவர்களை மரியாதையாகவும் அன்பாகவும் உபசரிக்கிறேன். (ஆம் / இல்லை)
09. நான் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பேன். (ஆம் / இல்லை)
10. நான் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
11. நான் அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
12. நான் பணிவு உள்ளவர். (ஆம் / இல்லை)
13. நான் ஓர் சிறந்த தலைவராக / தலைவியாக இருக்க விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
14. நான் ஓர் சிறந்த தலைவராக இருப்பது பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
15. நான் எனது தாய் நாட்டைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். (ஆம் / இல்லை)
16. நான் எனது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவேன். (ஆம் / இல்லை)
17. நான் எனது சுற்றாடலைப் பாதுகாப்பேன். (ஆம் / இல்லை)
18. நான் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதைப் பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
19. நான் என்னைப் போலவே பிறவுயிர்களையும் பாதுகாக்கிறேன். (ஆம் / இல்லை)
20. நான் எனது சமய அனுட்டானங்களையும் அறநெறிப் பண்புகளையும் பின்பற்றுகிறேன். (ஆம் / இல்லை)
21. நான் அறநெறிப்பண்புகளைப் பின்பற்றுவது குறித்து மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
22. நான் எனது பொறுப்புக்களை உற்சாகத்துடன் நிறைவேற்றுகிறேன். (ஆம் / இல்லை)
23. வருங்காலத்தில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக என்னைத் தயார் செய்து கொள்கிறேன். (ஆம் / இல்லை)
24. வருங்காலத்தில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வது பற்றி மேலும் கற்றுக்கொள்ளவும் வழிகாட்டல்களைப் பெறவும் விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
25. நான் சரியான தெளிவான தீர்க்கமான முடிவுகளை எடுக்கின்றேன். (ஆம் / இல்லை)
26. நான் சரியான தெளிவான தீர்க்கமான முடிவுகளை எடுப்பது பற்றி மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். (ஆம் / இல்லை)
27. நான் போற்றத்தகுந்த பெரியார்களைப்போற்றுகின்றேன். (ஆம் / இல்லை)
28. அப்பெரியார்களது வாழ்க்கை வரலாறுகளைப் விரும்பிக் கற்கிறேன். (ஆம் / இல்லை)
29. நான் எனது ஆசிரியர்களை உயர்வாக மதிக்கின்றேன். (ஆம் / இல்லை)
30) நான் எனது பெற்றோர்களை உயர்வாக மதிக்கின்றேன். (ஆம் / இல்லை)
31. நாள்தோறும் நாள்தோறும் எல்லா வழிகளிலும் எல்லா விதங்களிலும் நான் முன்னேறுகிறேன். (ஆம் / இல்லை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர அட்டவணை

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 9
செயல் நூல்
தி.உ.தயசூரியன்

Tamil Language and Literature
Grade - 9
Work Book
T.Uthayasooriyan

ISBN 955-98302-2-8

Price: 200/=




தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 8
செயல் நூல்
தி.உ.தயசூரியன்

Tamil Language and Literature
Grade - 8
Work Book
T.Uthayasooriyan

ISBN 955-98302-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org